கரணவாய் வித்தியாபிவிருத்திச்சங்க வெளியீடு—ச.

உ

சிவமயம்

# தமிழ்மொழியாராய்ச்சி

---

இஃது

கரணவாய்

பண்டித. திரு. செவ்வந்திநாத தேசிகர்

அவர்களால்

எழுதப்பெற்று,

---

வண்ணார்பண்ணை

ஸ்ரீ ஷண்முகநாத யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

பவ ௵ புரட்டாதி ௴

கரணவாய் வித்தியாபிவிருத்திச்சங்க வெளியீடு—௪.

உ

சிவமயம்

# தமிழ்மொழியாராய்ச்சி

---

இஃது

கரணவாய்

பண்டித. திரு. செவ்வந்திநாததேசிகரவர்களால்

எழுதப்பெற்று,

---

வண்ணார்பண்ணை

ஸ்ரீ சண்முகநாத் யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

பவ௵ புரட்டாதிமீ

---

# பதிப்புரை.

இற்றை ஞான்று பலப்பல தமிழ்மொழி யாராய்ச்சி நூல்கள் தமிழ்நாட்டில் நின்று நிலவுகின்றன. ஆயினும், வேண்டியவாறு ஆதரிக்கப்படுகின்றில. இந்நிலையில் இருமொழியும் வல்ல பண்டிதரவர்களும் கனிமுயன்று இந்நூல் தந்தனர். என்னை? ஆராய்ச்சியுலகில் எழுந்த நூல்கள் வேண்டுதல் வேண்டாமையின்றி யாராயப்பெருமையானும், "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற்——கோடாமை சான்றோர்க்கணி." என்னும் பெரியார் வாக்குப் போற்றப்படாமையானும், பொருந்துமாறின்றியும் தத்தம் மதமே நிறுவத்துணிதலானும் உண்மை புலப்படாமையின் என்பது.

இருமொழியும் வல்லார்க்கே இவ்வித ஆராய்ச்சிக்குப் பெரிதும் வேண்டப்படுவதாய தருக்கநூற் புலமையும், நடுவிகவாவிருமொழிநோக்கும் கூடுதலால், அவ்வியல் வாய்ந்த பண்டிதரவர்களாராய்ச்சி சிறப்புடைத்தென்பது ஒருதலை.

அறிஞர் குணநலங்கண்டு ஆதரிப்பாராக. பண்டிதரவர்கட்குத் தமிழ்நாடு யாது கடவதோ?

வேதாரணியேசுவரவிதாலயம்
காரணவாய்
பவஷு புரட்டாதி மீ

இங்ஙனம்,
ஆ. கணபதிப்பிள்ளை
க-வி-சங்கச்செயலாளர்.

# முகவுரை.

உலகின்கண் தோன்றிய மொழிகளுள் தமிழ், சமஸ்கிருதம், கிறீக், லத்தீன், க்புரு, ஆகிய ஐந்தும் மிகப் பழைய காலத்திற் சிறப்புற்று விளங்கின. இவற்றுள் தமிழ்மொழி ஒன்றுமே ஒப்புயர்வற்ற அளவிறந்த நூல்கள் பல ஆதி காலத்தில் தன்னகத்தே கொண்டுள்ள பெருமைக்கு இலக்காக விளங்கியது. முச்சங்கங்களால் முதலிற் போற்றி வளர்க்கப் பெற்ற பெருமையும் இம்மொழிக்கேயுரியது. அளவிறந்த சிறப்புக்கள் வாய்த்த அமிழ்தினுமினிய நம் தமிழ் மொழியைப்பற்றிய ஆராய்ச்சியில் ஆர்வங் கொண்டவராய் நம் தமிழ்நாட்டுத் தமிழ்ப்புலவர் பலர் ஆராய்ச்சி நூல்கள் பலவற்றை உலகுக்கு உதவியிருப்பது தமிழ்மக்களால் மிகவும் பாராட்டற்பாலதொன்றாகும்.

நவீன ஆராய்ச்சித்துறையிற் சலியாது உழைப்பவரும், அருங்கலை விநோதரும், சமஸ்கிருதம், தமிழ் என்னும் இரு பெருமொழிகளிற் சிறந்த பாண்டித்தியம் படைத்து விளங்குபவருமாகிய உயர்திரு. திரு. செவ்வந்திநாததேசிகரவர்கள் இயற்றிய "தமிழ்மொழியாராய்ச்சி" என்னும் நூல் கிடைக்கப்பெற்று ஆங்காங்கு படித்துப் பார்த்தேன். இதன்கண் "பாஷை" முதல் "தமிழறிவின்பயன்" இறுதியாக வைத்துச் செவ்விய உரைநடையில் வரையப்பெற்ற பத்து விஷயங்களும் பலதிறப்பட நுணுகி ஆராயப்பெற்றுப் படிப்பவர் உள்ளத்தில் தனித்தமிழ்ப்பற்றையும், தமிழ் மொழியாராய்ச்சி விருப்பத்தையும் உண்டுபண்ணுந் தாத்தனவாய் மிளிர்கின்றன.

நூலாசிரியராகிய தேசிகரவர்கள் இந்நூலின்கண் தமது கொள்கைகளுக்கியைந்த சிலபழைய ஆராய்ச்சி முடிபுகளைக் கையாண்டும், இயையாத சிலவற்றைக் கண்டித்தும் வேண்டியவிடங்களில் தமது புதிய கொள்கைகளை நிலைநாட்டியும் தமது ஆராய்ச்சித் திறனை யாவரும் நன்குணரவைத்துள்ளார்கள். நூலாசிரியர் சங்கச் சான்றோர் நூல்களிலும், பிறநூல்களிலும் சிறந்த பயிற்சியுடையவர் என்பது அவர் "தமிழ் வழங்கு நிலன்" என்ற பிரிவில் "குமரி" என்னும் பதத்தைப்பற்றிச் செய்த ஆராச்சியால் நன்கு புலனாகும். தமிழ்மொழியாராய்ச்சி செய்யப்புகுவோருக்கு சமஸ்கிருத மொழியுணர்ச்சியும் இன்றியமையாததென்பதும் இந்நூலைப் படிப்பவர்களால் தெள்ளிதில் உணரப்படும்.

தமிழ் மொழியாராச்சியின்பத்தில் திளைக்கும் இந்நூலாசிரியர் இன்னோரன்ன நூல்களைக் காலத்துக்குக் காலம் எழுதி வெளியிட்டுத் தமிழ்த்தாய்க்குத் தொண்டியற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

மயிலணி<br>சுன்னாகம்<br>11-10-34.

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, B. A.

# நூன்முகம்.

உலகத்துள்ள மக்களெல்லாருவருந் தத்தம் மொழி, சாதி, சமய மென்பவற்றை மேனிலைப்படுத்த விரும்புத லியல்பே. அதனால், ஒவ்வோர் குழுவின்கட்பட்ட சான் றோருந் தத்தம் மொழி முதலியவற்றினியல்பை யாராய் வதும், ஆராய்ந்தவற்றை வெளியிடுவதுஞ் செய்வர். அங் ஙனமே தமிழ்மக்களுள்ளுஞ் சில சான்றோர் நந்தமிழ் மொழியினியல்பை யாராய்ந்தும், ஆராய்ந்தவற்றை வெளி யிட்டு முள்ளார். ஒரு பொருளைப்பற்றி யாராய்பவர் தத் தம் அறிவிற்கேற்றவாறே யாராய்தன் முடியும். அதனால் ஆராய்ச்சி முடிபுகள் பலதிறப்படுவதுண்டு. ஒருவரின் ஆராய்ச்சி முடிபிற் காணப்படாத சில உண்மைகள் மற் றொருவரினாராய்ச்சி முடிபிற் காணப்படுதலுங் கூடும். ஆத லால், கற்றுணர்ந்த பெரியோர் ஒவ்வோர் பொருளைப்பற் றித் தாம் ஆராய்ந்து கண்ட உண்மைகளைப் பிறருணரு மாறு வெளிப்படுப்பது சாலவும் நலம் பயப்பதொன்றாம்.

யாம் சுன்னாகம் பிராசீன பாடசாலையிற் கல்விபயிலுங் காலத்துத் தமிழ்மொழியைப் பற்றிப் பல அறிஞரெழுதிய கட்டுரைகளைப் பயிலவேண்டிய தொடர்பு ஏற்பட்டது. அதனால், தமிழ்மொழியைப்பற்றி யறிஞர் பலருங் கொண் டிருக்குங் கருத்து வேறுபாடுகளும், அவற்றுட் சிலவற் றின் பொருத்தமின்மையுந் தெற்றெனவெமக்குப் புலப் படுவனவாயின. அப்போழ்து அறிஞர் சிலர் கருத்தின் பொருத்த மின்மையை யுலகிற்குணர்த்து மாற்றாலெங்

கருத்தை வெளியிடக் கருதி, அப்பொருள் பற்றியோர் கட்டுரை வரையச் சிறிது முயற்சித்தேம். கல்விபயிலுங் காலமாதலின் அதற்கேற்றவமைய மஞ்ஞான்று வாய்த்தி லது. கலாசாலையினின்றும் நீங்கிய பிற்றைஞான்று ஒரு வாறு அதற்கேற்ற வமையம் வாய்த்ததாகலின், "பாஷை" என்பது முதற்பத்துப் பிரிவினதாகிய "தமிழ்மொழியா ராய்ச்சி" என்னு மிக்கட்டுரையை வரைந்து "ஈழகேசரி" என்னும் பத்திரிகையிற் காலந்தோறும் வெளியிட்டனம்.

இஞ்ஞான்று, காரணவாய் வித்தியாபிவிருத்திச்சங்கத் தார் அக்கட்டுரையை யுலகிற்குப்பயன் படுத்தக்கருதி, அத னைத்தம் சங்கப்பொறுப்பில் வெளியிடுவதாகக்கூறி யெம் பாற் பெற்றுப் பதிப்பித்துள்ளார். அதுபற்றி அச்சங்கத் தார்க்கு யாம் மிக்க கடப்பாடுடையேம். சிற்றறிவுடைய வெம்மையு மிந்நன்முயற்சியி லீடுபடச் செய்த விறைவன் றிருவருளை யென்றுஞ் சிந்திக்கின்றேம். குணநலங்கண்டு வக்கும் பெரியோர் குற்றங்காணிற் பொறுத்திடுக.

காரணவாய் } இங்ஙனம்,
பவ ஹு புரட்டாதி மீ } திரு. செவ்வந்திநாததேசிகர்.

# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பாஷை | 1 |
| 2. | தமிழின் தோற்றம் | 3 |
| 3. | தமிழுக்குத் தமிழென்னும் பெயரீடு | 8 |
| 4. | தமிழின் பிரிவு | 13 |
| 5. | தமிழ்வழங்கு நிலன் | 13 |
| 6. | தமிழின் சிறப்பு | 36 |
| 7. | தமிழின் வளர்ச்சி | 39 |
| 8. | தமிழ்நூற் பகுதி | 56 |
| 9. | தமிழ்மொழிப் புலவர் | 75 |
| 10. | தமிழறிவின் பயன் | 80 |

உ

சிவமயம்.

# தமிழ் மொழியாராய்ச்சி.

---

தமிழ்மொழியா ராய்ச்சியெனச் சாற்றுமுறை நூனன்
கிமிழ்கடல்சூழ் பார்மிசையே யாக்க—வமிழ்துறழுந்
தண்டமிழை முந்துதலைச் சங்கமிருந் தாய்ந்தகறைக்
கண்டனாய ரொண்கழலே காப்பு.

## க.—பாஷை.

இறைவன் உலகைப்படைப்பான்றொடங்கிப் பொருட்பிரபஞ்சத்தைப் படைத்தவன், அதனோடு சொற்பிரபஞ்சத்தையும் படைத்திட்டான். அச்சொற்பிரபஞ்சம் பல்வேறு வகைத்தாய்ப் பிரிந்து பாஷையாய் உலகின்கண் நிலவுவதாயிற்று. பாஷையாவது ஒருவர் தம்முள்ளக்கிடக்கையைப் பிறர்க்குணர்த்துதற்கும், பிறருள்ளக்கிடக்கையைத் தாமுணர்தற்கும் கருவியாயுள்ள மொழியீட்டமாம். பாஷா என்னுமாரியச்சொல்லே பாஷையெனத் தமிழில் வந்து வழங்குகின்றதாகலானும், அவ்வாரியச்சொல்லின் சொன்மூலம் பாஷ் என்பதாகலானும், அதன் பொருள் வெளிப்படையானவாக்கு என்பதாகலானும் குறிப்பு முதலியனவும் பாஷையுள் அடங்குமென்பார்கூற்றுப்பொருந்துமாறின்று. மொழியாவது எழுத்துக்களோடொருபுடையானொற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்துவருவது. தருக்கநூலுடையார் "சக்தப்பதம்" என்பர். அதாவது இச்சொல்லால் இப்பொருள் அறியத்தகுந்தது என்னும் இறைவனுடைய சங்கேதமாகிய சக்தியையுடையது பதம் என்பதாம். நீராகிய

பொருளை நீரென்னுஞ்சொல்லாற் கூறுதலும், பொன்னாகிய பொருளைப் பொன்னென்னுஞ்சொல்லாற் கூறுதலும்போல்வன இறைவனுடைய சங்கேதமாம். இதனைச் சமயவாற்றலெனவுங் கூறுப. நீரென்னுஞ் சொற்கேட்ட மாத்திரத்து நீரையுணர்தலும், பொன்னென்னுஞ் சொற்கேட்ட மாத்திரத்துப் பொன்னையுணர்தலும் போல்வன சமவாய சம்பந்தமாம். அதாவது சொற்கும்பொருட்குமுள்ள சம்பந்தம் சமவாய சம்பந்தமாகலின் ஒருசொல்லைக் கேட்டபொழுது அதனாற் குறிக்கப்படும் பொருளையுணர்தல் அச்சம்பந்த விசேடமாகுமென்பது. ஈண்டுக்கூறிய சம்பந்தவிசேடத்தால் உலகின்கணுள்ள பல்வேறு வகைப்பட்ட பொருள்களையுமுணர்தற்குக் கருவியாயுள்ளனவும், ஒருபடித்தாயினவுமாகிய பல்வேறுவகைப்பட்ட மொழித்திரளைக் கொண்டது ஒரு பாஷை எனப்படும். அப்பாஷைதான் சிலவாய்ப் பலவாய் மிகப் பலவாய் விரிந்துவிட்டது. முன்னாளில், ஆரியமுந் தண்டமிழுமென இருவகைப்பட்டுச் சிலவாயிருந்தது. பின்னாளில், ஆரியம், தண்டமிழ், சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளு, குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மதகம், கடாரம், கவுடம், குசலம் எனப் பத்தொன்பது வகைப்பட்டுப் பலவாய்ப் பொலிந்தது. இந்நாளில் முற்கூறியவற்றோடு ஆங்கிலம், கிறீக், லற்றீன், பிறென்ச், ஜப்பான், பாலி, அராபியா, மலையாளம், ஹிந்துஸ்தானி, ஹிந்தி, பஞ்சாபி, ஸிந்தி, மராத்தி, ஒட்ரம் முதலியனவாகி மிகப்பலவாய் மலிந்தது. தற்போது இந்தியாவில் இருநூற்றிருபது பாஷைகள் பேசப்பட்டு வருகின்றன எனச் சரித்திர ஆராய்ச்சிகாரர் கூறுகின்றனர். இங்ஙனம் பல்வேறுவகைப்பட்ட பாஷைகளுட் டமிழுமொன்றாய்த் தலைசிறந்து விளங்குகின்றது.

## உ.—தமிழின் தோற்றம்.

இனி, ஆரியமொழி எவ்வாறு ஆதிக்கட் பரமசிவனாற் றோற்றுவிக்கப்பட்டதோ அவ்வாறே தமிழ்மொழியும் ஆதிக்கட் பரமசிவனாற் றோற்றுவிக்கப்பட்டதாகும். ஆரியம் ஆதிக்கட்டோன்றிற்றென்பதும், இறைவன்பாற் றோன்றிற்றென்பதும் வேதாகம முதலிய உரையளவைகளாற்பெறுதும். அதுபோலத் தமிழ்மொழி ஆதிக்கட்டோன்றிற்றென்பதும், இறைவன்பாற் றோன்றிற்றென்பதும் எதனாற் பெறுதுமெனின்,

"தம்மல ரடியொன் றடியவர் பரவத் தமிழ்ச்சொலும்
வடசொலுந் தாணிழற் சேர—வம்மலர்க் கொன்றை
யணிந்த வெம் மடிக ளச்சிறு பாக்கம
தாட்சி கொண் டாரே."

"ஆரியமுஞ் செந்தமிழு மானான் கண்டாய்"

"வடமொழியுந் தென்றமிழு மறைகணான்கு
மானவன்காண்"

"மாரியுங் கோடையும் வார்பனி தூங்கனின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
வாரிய முந்தமி ழும்முட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே"

என்னும் உரையளவைகளாற் பெறுதும் என்பது.

அஃது அற்றாக; ஈண்டுக் கூறிய உரையளவைகள் தமிழ்மொழி இறைவன்பாற் றோன்றிற்றென்னும் ஒன்றற்குப் பிரமாணமாகுமேயன்றி, ஆதிக்கட்டோன்றிற்றென்னும் மற்றொன்றற்குப் பிரமாணமாமாறில்லை. அன்றியும், உலகின்கண் மொழியென்னு மொளியானது அஃதிறும் வரையும் விளங்காதொழியின் இம்மூவுலகுமிருண்மயமாயி

ருக்குமாகலின் மக்கள் முதலியோர் ஒருவர்க்கொருவர் தம் கருத்தை வெளியிட்டும், நன்மை தீமைகளையுணர்ந் துஞ் செய்தும், வினைகளையீட்டியும் நுகர்ந்தும் மூலமலங் கழித்துய்யுமாறு இறைவன் பாஷையைப் படைத்தான். பாஷையொன்றே யமையும். பலவேண்டா. அங்ஙனமாக ஆரியமொழி ஒன்றுளது. அதுவே ஆதிக்கட்டோன்றிற்று. ஆதலின், இத்தமிழ்மொழி ஆதிக்கட்டோன்றிற்றென்றல் பொருந்தாதெனின், அற்றன்று. முற்கூறிய "மாரியுங்கோ டையும்" என்னுந் திருமந்திரச் செய்யுளுக்குக்கார் முதலிய அறுவகைப்பருவமும் லயப்பட்டுநின்று வறட்சியடைந்தி ருக்குங்காலத்தில் வடமொழி தென்மொழிகளிலுள்ள பதி ஞானங்களை (இவற்றிற்கு வித்தாயுள்ள பிரணவத்தை) ஏக காலத்திலே உபதேசித்துப் பாசத்திக்கு (இறைவன்) அனுக்கிரகஞ் செய்தானென்பது பொருளாகலானும், இதன்கருத்துச், சங்கார காலத்துக்குப் பின் மறுசிருட்டி தொடங்குமுன் சிவபிரான் சத்திரூபமாயுள்ள தமது அரு மைத் தேவியாருக்குப் பிரணவத்தை உபதேசித்தருளினன் என்பதாகலானும், இறைவன் உயிர்களைப்படைக்கத் தொட ங்கி ஆண்மக்களைப் படைத்தவன், அவர்க்குத் துணையாக அதேகாலத்துப்பெண்களையும் படைத்ததுபோல ஆண்டன் மைத்தாகிய ஆரியபாஷையைப் படைத்தவன் பெண்டன் மைத்தாகிய தமிழ்ப்பாஷையையும் அதனோடேதே காலத் துப் படைத்தானாகலானும், பக்குவரேயன்றி யபக்குவர் அறியக்கூடாத பல அரிய விஷயங்களையும், மந்திரங்களை யும் சிலரேயன்றிப் பலர் அறியக்கூடாதவண்ணம் தெரி விக்க வேண்டிப் பேச்சிலில்லாததும் கடுமையானதுமாகிய ஆரிய மொழியையும், தங்கருத்தை வெளிப்படுக்கும் வகை யால் யாவர்க்கும் பயன்படுமாறு பேச்சிலுள்ளதும் இல குவானதுமாகிய தமிழ்மொழியையும் இறைவன் படைத்

தானுகலானும், அரிய விஷயங்களைப் பெரியார் சிலர்க்கு மாத்திரம் புலப்படுக்குமாறு இறைவனருளிய பாடையே யாரியமென்பது. ஆரிய பாஷையில் யோகசாரம், யோக ரத்தினம் என்னும் நூல்களைச் செய்த ஞானப்பிரகாசமுனிவர் அந்நூல்களினிறுதியில் அந்நூல்களைப் பிறபாஷையில் மொழிபெயர்க்கக்கூடாதென்றுணையிட்டுக் கூறுதலால் உய்த்துணரப்படுமாகலானும் யாவர்க்குமிலகுவிற் பயிலத்தக்க தமிழ்ப்பாஷையை ஆரியபாடையோடாதிக்கண் இறைவன் படைத்தானென்பது. அதுநிற்க.

இஞ்ஞான்று உலகின்கண் வழங்கும் சிங்களம், பாலி, லற்றீன் முதலிய பிறபாஷைகளெல்லாம் ஆரியம் அல்லது தமிழிலிருந்தே தோன்றினவெனப் பெரியார் பலர் சொல்லக்கேட்டாமன்றே. அவைபோலத்தமிழும் ஆரியபாடையினின்றுந் தோன்றிற்று என்றுற் படுமிழுக்கென்னையெனிற் கூறுதும். முற்கூறிய "மாரியுங் கோடையும்" என்னுஞ் செய்யுளில், "ஆரிய முந்தமி ழும்முட னேசொலி" எனக் கூறப்பட்டமையானே ஆரியம் வேறு தமிழ் வேறு என்பதும், ஆரியத்தினின்றுந் தமிழ் தோன்றவில்லை என்பதும் பெறப்படுதலானும், தமிழ் ஆரியத்தினின்றுந் தோன்றிற்றென்றற்கு யாதோர் பிரமாணமு மின்மையானும், ஆரியச்சொற் சில தமிழில்வந்து வழங்கினும் அவ்வாரியச் சொற்களாற் குறிக்கப்படும் பொருளைக் குறிக்கும் சொல்லின்மையானன்றி ஆரியருடைய கலப்பால் வந்த வழக்காகலானும் ஆரியத்தினின்றுந் தமிழ்தோன்றிற்றென்றல் பொருந்தாதென்பது.

ஆயின், ஆரியத்தினின்றுந் தமிழ் தோன்றுதவாறுபோல ஆரியம் அல்லது தமிழினின்றும் ஆங்கிலம், சிங்களம், பாலி முதலிய பிறபாஷைகளுந் தோன்றிற்றிலவெ

னின், அற்றன்று. அவ்விருபாஷையின் பின்பே பிறபாஷைகள் தோன்றினவென்பது யாவர்க்குமொப்ப முடிந்த முடிபாகலானும், ஆங்கிலபாஷையில் தாய், இல்லை, மூன்று என்பன முதலிய பொருளைக் குறிக்குஞ்சொற்கள் மாதா, நோ, திறி என்னும் ஆரியத்தினின்றும் வந்த மதர், நோ, திறீ என்பன முதலியனவாகவிருத்தலானும், அவ்வாறே ஏனைய பாஷைகளிலும் சில பொருள்களைக் குறிக்குஞ் சொற்கள் ஆரியம் அல்லது தமிழின் சிதைவாகவிருத்தலானும், தனக்கெனவேண்டிய சொற்களிருப்பவும் ஆரியத்தினுமிருந்து சிலசொற்கள் வந்து வழங்குந் தமிழ்போலன்றிச் சில பொருள்களைக் குறிக்குஞ் சொற்கள் தமக்கென வேறிலவாக அவற்றை நிரப்புவதற்கு ஆரியம் அல்லது தமிழிலுள்ள சில சொற்களைப் பெற்றுக்கொண்டே சிங்களம், ஆங்கிலம் முதலிய பாஷைகள் பாஷையென்னுந் தம்பெயரை யதார்த்தமாகச் செய்யவேண்டுமாகலானும் அவ்விருபாஷையுமொழித்தொழிந்த பாஷைகளெல்லாம் ஆரியம் அல்லது தமிழிலிருந்தே தோன்றினவென்பது.

அங்ஙனேல், ஆங்கிலத்தில், வித்தியாசாலை, கடவுள், நீர், அரசன் என்பன முதலிய பொருளைக்குறிக்கும், ஸ்கூல், கோட், உவாற்றர், கிங் என்பன முதலிய பெரும்பாலான சொற்கள் ஆரியம் அல்லது தமிழிலிருந்து தோன்றியனவாகத் தெரியவில்லையாகலானும், அதுபோலவே ஏனைய பெரும்பாலான சொற்கள் ஆரியம் அல்லது தமிழிலிருந்து தோன்றினவாகத் தெரியவில்லையாகலானும் ஆங்கிலம், சிங்களம் முதலிய பிற பாஷைகளெல்லாம் ஆரியம் அல்லது தமிழிலிருந்தே தோன்றினவென்றல் இன்னொருவாற்றுற் பொருந்துவதாகக் காணப்படவில்லையேயெ

னின், அற்றன்று. ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளிலு ள்ள சொற்கள் சில ஆரியம் அல்லது தமிழிலிருந்து வந்து வழங்க, பல அவ்வாறு வந்து வழங்காமையினன்றே அப் பாஷைகள் ஆரியம் அல்லது தமிழ் என்னும் பெயரோடு வழங்காது ஆங்கிலம், சிங்களம், லற்றீன் முதலிய பிறபெ யரோடு வழங்குகின்றன. அன்றி, ஆரியம் அல்லது தமி ழினின்றே எல்லாச் சொற்களும் சிதைந்து அல்லது அதே வடிவமாய் வந்தனவாயின் வழக்கின்கட் சிதைந்து வரும் ஆரியம் அல்லது தமிழ்ச்சொற்கள்போலக் கருதப்பட்டு அவையும் ஆரியம் அல்லது தமிழென்றே வழங்கவேண்டு மென்பது.

அங்ஙனேல், ஆரியமுந் தமிழும் இறைவன்பாற்றோன் றின. ஏனைய பாஷைகளிற் சில சொற்கள் ஆரியம் அல் லது தமிழிலிருந்து வரப் பல சொற்கள் அவ்வாறன்றித் தமக்கெனவேயுள. ஆகவே, அச்சொற்கள் இறைவன்பாற் றோன்றினவாதல் வேண்டும். அவ்வாறாகவே எல்லாப்பா ஷையும் இறைவன்பாற் றோன்றினவாக ஆரியமுந் தமி ழுமே இறைவன்பாற் றோன்றினவென்பதென்னையெனிற், கூறுதும். அறிவிற் சிறந்த பெரியோர்கள் சிறுபான்மை யாக ஆரியம் அல்லது தமிழிலிருந்து சொற்களை யெடுத் தும், பெரும்பான்மையாகத் தாமே புதிதாகச் சொற்களை யுண்டாக்கியும் சேர்த்துக் கொண்ட அச்சொற்றிரள்களை ஆங்கிலம், சிங்களம் முதலிய பெயரிட்டு வழங்குகிறார்க ளென்பது. அது எதுபோலுமெனில், இலக்கண விளக்க நூலுடையார் சிறுபான்மையாகத் தொல்காப்பியம், நன் னூல், அகப்பொருள் விளக்கம், தண்டியலங்காரம் முத லிய நூல்களிலுள்ள சூத்திரங்களைக் கொண்டும், பெரும் பான்மையாகத் தாமே சூத்திரங்களைச் செய்துகொண்டும்

இயற்றிய நூலை அவற்றின் வேருக இலக்கண விளக்க மெனப்பெயரிட்டழைத்தது போலுமென்பது.

அற்றேல், இறைவனருளிச்செய்த பாஷைகளேயன்றி மக்கள் தம் புத்திநுட்பத்தா லாக்கிக்கொண்ட பாஷைகளும் அவை போலப் பாஷைகளாகக் கருதப்படலாமோ வெனில், வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவனாற் சொல்லப்பட்டவேயன்றி, அவனருள் வழிப்பட்ட சான்றோராற் சொல்லப்பட்டனவும் முதனூலாகக் கருதப்படுமாறுபோல, இறைவனருளிய ஆரியமுந் தமிழுமேயன்றி அறிவின் முதிர்ந்த பெரியோராலாக்கப்பட்ட ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளும் அவற்றோடு ஓவ்வோர் பாஷைகளாகக் கருதப்படலாமென்பது.

## ௩.—தமிழுக்குத் தமிழென்னும் பெயரீடு.

இனி, இறைவன்றன்னாற் றோற்றுவிக்கப்பட்ட இப்பாஷைக்குத்தமிழெனப்பெயரிட்டு வழங்கினன், சொற்களையுணர்த்துஞ் சொல்லென்னுஞ் சொல்லுமொரு சொல்லாயினவாறுபோலத் தமிழ்ப்பாஷையையுணர்த்துந் தமிழென்னுஞ் சொல்லுமொரு தமிழ்மொழியேயாம். சிலர் திராவிட மென்னுமாரியச் சொல்லே தமிழென்றாயிற்றெனக் கூறுவர். ஆரியபாஷையைக் குறிக்கும் ஆரியம் என்னுஞ் சொல் ஆரியச்சொல்லே யாயினவாறுபோலத் தமிழ்ப்பாஷையைக் குறிக்கும் தமிழ் என்னும் சொல் தமிழ்ச்சொல்லாகவிருத்தலே பொருத்தமாமாகலானும், தமிழென்னுஞ் சொல் திராவிடமென்னுமாரியச் சொல்லிலிருந்து தோன்றிற்றென்றற்கு யாதோர் பிரமாணமு மின்மையானும், பின்னுளிற் றோன்றிய ஆங்கில பாஷையைக் குறித்தற்கு "ஆங்கில" என்னுஞ்சொல் ஆரியத்திற் காணப்படுதல்போல

அந்நாளிற்றோன்றிய இத்தமிழ்மொழியைக் குறித்தற்குத் "திராவிட" என்னுஞ் சொல்லும் ஆரியத்திற் காணப்படுகின்றதாயினும் அது ஏனை ஆரியச்சொற்கள்போலத் தனக்கோர் சொன்மூலமில்லாதிருத்தலே அது இயல்பாயமைந்த ஆரியச்சொல்லன்மைக்குச் சான்றாமாகலானும், தமிழ் என்னும் பெயராற் குறிக்கப்படுந் தமிழ்ப்பாஷையைக் குறிக்க வேண்டின் அப்பெயரானே தாமுங் குறித்தலியலாதாகலின் அதைக் குறித்தற்கென ஆரியர் செய்துகொண்ட குறியே திராவிடமென்னுஞ் சொல்லாமாகலானும் திராவிடமென்னுமாரியச் சொல்லிலிருந்து தமிழ் என்னுஞ்சொல் தோன்றிற்றென்றல் பொருந்தாதென்பது.

இன்னும், வேறொரு சிலர் திரமிளமென்னு மாரியச் சொல்லிலிருந்து தமிழ் என்னுஞ் சொற்றோன்றிற்றெனக் கூறுவர். "திராவிட" என்னுமாரியச்சொல் திராவிடம் அல்லது திரமிளமெனத் தமிழில் வந்து வழங்குகின்றதன்றித் திரமிளமென்னுஞ் சொல் வேறோராரியச் சொல்லிலிருந்து தோன்றினதாகப் புலப்படாமையால் அது பொருந்தாதென்பது முற்கூறியவாற்றாற் பெறப்படுமென்க.

இனி, இன்னொரு சாரார் "தமிழில் தமிழென்னும் பதந் தோன்றுமுன்னர்ச் சம்ஸ்கிருதத்தில் திராவிடமென்னும் மொழி தமிழையே உணர்த்திற்று. உலகத்தில் எஞ்ஞான்றும் பொருளே முந்தியது. ஆயினும் பொருளுள்ளவிடத்திலேயே அதற்குப் பெயர் தோன்றவேண்டுமென்னும் நியதியில்லை. ஒரு பொருளைப்பற்றி உரையாடநேர்ந்தவிடத்தே அதற்கொரு பெயரிட வேண்டிவரும். அல்லாதவிடத்துப் பெயர் தோன்றாது. தம் பாஷைக்குப் பெயரிடவேண்டிய அவசியம் நேராமையால், தமிழர் அதற்குப் பெயரிடாதிருந்தனர். ஆரியர்க்கு அவ்வவசியம் நேர்ந்த

மையின், அவர் அதற்குத் திராவிடம் அல்லது திரமிளமெனப்பெயரிட்டனர். அன்றியும் தமிழென்பதிலிருந்து தமிழர் என்னும் பதம் வந்ததன்று; தமிழர் என்பதிலிருந்து தமிழருடைய பாஷை என்னும் பொருளில் தமிழ் என்னும் பதந் தோன்றிற்று. இதுவே முறை. தெலுங்கருடைய மொழி தெலுங்கு; கருநாடருடைய மொழி கருநடம்; மலையாளருடைய மொழி மலையாளம்; ஆரியருடைய மொழி ஆரியம்; அங்கிலருடைய மொழி அங்கிலம் என்பன காண்க. இலக்கணக் கொத்துடையாரும் "தெலுங்கன்" சொல்லுதற்றொழிலையுடைய பாஷை தெலுங்கன் சொல்லு எனற்பாலது தெலுங்கு எனப் பின்மொழி கெட்ட மூன்மொழியீற்றின் விகுதி பொருந்தியது; "வடுகுமது என்று கூறுவர்" எனக் கூறுவாரெனின், அற்றன்று. உலகின்கண் இறைவன் பொருட் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த காலத்திலேயே இப்பொருள் இச்சொல்லாலுணரத்தக்கது; இப்பொருள் இச்சொல்லாலுணரத் தக்கது என ஒவ்வோர் பொருட்கும் குறியிட்டருளினனென்பது பாஷை என்னும் பகுதியில் முன்னரே கூறிப்போந்தாமாகலானும், தமிழ்ப்பாடையும் ஆதிக்கண் இறைவனாற்றோற்றுவிக்கப் பட்டதென்பது, தமிழின் தோற்றமென்னும் பகுதியில் கூறிய பல ஏதுக்களால் அனுமித்தறியப்படுதலின் தமிழ்ப்பாடைக்குத் தமிழ் என்னுங் குறியீடு செய்தவன் இறைவனே யாமாகலானும், பொருளுள்ளவிடத்திலேயே அதற்குப் பெயர் தோன்றவேண்டுமென்னும் நியதியில்லையேயெனினும் தோன்றியுள்ள பொருளைப்பற்றி உரையாட வருமேயன்றித் தோன்றாப் பொருளைப்பற்றி உரையாடவாராதாகலானும், தமிழ்ப்பாடை தான்றோன்றிய காலத்து இறைவனாலிடப்பட்ட தமிழென்னும் பெயரைக்கொண்டு விளங்கியபின்பே பிறநாட்டார்க்

குத் தமிழைப்பற்றி உரையாட நேருமாகலானும், ஒரு பொருட்கிடும்பெயர் அப்பொருளைப்பற்றி உரையாடவேண்டி வந்த காலத்து இடப்படுவதன்றி, அப்பொருளைப் பற்றி உரையாட வேண்டி வருமென்பதை முன்னரேயுணர்ந்து அப்பொருள் தோன்றிய காலத்திலேயேயிடப்படுமாகலானும், ஒருபொருட் கிடும் பெயர் ஓரவசியத்தைக் கண்டேயிடவேண்டுமென்னும் நியதியின்மையானும், உலகின்கண் தாய் தந்தையர் தாம் பெற்ற பிள்ளைக்குத் தாமே பெயரிட்டழைக்கக் கண்டாமன்றிப் பிற நாட்டுள்ள ஒருவர் அப்பிள்ளைக்குப் பெயரிட்டழைக்கக் கண்டிலமாகலானும், தமிழர் தம் பாஷையைத் தமிழென வழங்கிய பின்பே ஆரியர் அப்பாடையைக் குறித்தற்குத் திராவிடமெனப் பெயரிட்டு வழங்கினுரேயன்றித் தமிழர் தம் பாடைக்குப் பெயரிட்டு வழங்குமுன்னர் ஆரியர் அப்பாடைக்குத் தம் பாஷை மொழியாற் பெயரிட்டு வழங்கினுரென்றல் சிறிதேனும் பொருந்தாமையானும், ஆரியமுந் தமிழும் ஆதிக்கட்டோன்றின பாஷைகளென முன்னரே கூறிப்போந்தாமாகலின் ஆரிய பாஷையைப் பேசுகின்றவர் ஆரியர் என்றும், தமிழ்ப் பாஷையைப் பேசுகின்றவர் தமிழரென்றும் கருதப்பட்டாரென்பதன்றி, ஆரியருடைய பாஷை ஆரியம் தமிஷருடைய பாஷை தமிழென்பது பல ஏதுக்களைக்கொண்டாராய்வுழிப் பொருத்தமாகக் காணப்படாமையானும், திராவிடருடைய பாஷை திராவிடமென்பதோ திராவிட பாஷையைப் பேசுகின்றவர் திராவிடரென்பதோ பொருத்தமானது என்னுமாராய்ச்சி நிகழுங் காலத்துத் திராவிடருடைய பாஷை திராவிடமென்பதே பொருத்தமானது என்போமாயின் தமிழர் ஆரியத்திற் றிராவிட ரெனப்பட்டுத் திராவிடருடைய பாஷை திராவிடமென்ருதல் வேண்டுமாகலானும், அவ்

வாறன்றித் திராவிட பாஷையையுடையவர் திராவிட
ரென்பதே ஆரியத்திற் பொருத்தமாகக் காணப்படலா
னும், அன்றியும் தமிழருடைய பாஷை தமிழ் என்பதா
யின் தமிழருடைய பாஷை தமிழ் என்பதுபோலத் தமி
ழருடைய பாஷை திராவிடமென்றும் வரவேண்டுமாகலா
னும், அவ்வாறன்றித் தமிழ்ப்பாடை ஆரியத்திற் திராவிட
மென்னும் பெயராற் குறிக்கப்பட்டு அப்பாடையைப் பேசு
பவர் என்னும் பொருளில் திராவிடரென வருதலானும்,
இன்னும் தமிழருடைய பாஷை தமிழ்ப் பாஷையாயின்
காலாந்தரத்திலவருடைய தமிழ்ப்பாஷை மாறி வேறு
பாஷை அவர் வழக்கிற்கு வந்துழியும் அவர் தமிழரென்றே
கூறப்படவேண்டுமாகலானும், மலையாள தேயத்தவர் முன்
னாளிற் றமிழராயிருந்து இன்னாளின் மலையாளம் பேசு
கின்றாராகலின் அவர் இந்நாளிலுந் தமிழரென்று கூறப்
படவேண்டுமேயன்றி மலையாளரென்று கூறப்படுதல்
பொருந்தாதாகலானும், மலையையுடைய நாடு மலையாள
மென்றும், மலையாளத்தில் வசிப்பவர் மலையாளரென்றும்,
மலையாளர் பேசும் பாஷை மலையாளமென்றும் கருதப்
பட்டு முன்பு தமிழ்ப் பாஷையைப் பேசினவர் பின்பு
அஃதொழிய மலையாள பாஷையைப் பேசினர் என
எண்ண இடமிருத்தலால், மலையாளருடைய பாஷை
மலையாளமெனக் கூறலொல்லுமாகலின், பின்னாளிற்றோன்
றிய மலையாளம் முதலிய பாஷைகளே அவ்வாறு வந்த
னவாகக் கருதப்படுமன்றி முன்னாளிற்றோன்றிய ஆரிய
முந் தமிழும் ஆரியருடைய பாஷை ஆரியம், தமிழரு
டைய பாஷை தமிழ் என வந்தனவென்றல் பொருந்தா
மையானும் தமிழில் தமிழ் என்னும் பதந் தோன்றுமுன்
னர்ச் சம்ஸ்கிருதத்தில் திராவிடம் என்னும் மொழி தமி
ழையே யுணர்த்திற்றென்றல் பொருந்தாதென்பது.

இனி, தமிழ் என்னுஞ் சொல் இனிமையெனப் பொருள்படும். அது, "தமிழ்தழிய சாயலவர் தங்குமலர்த் தூநீ—ருமிழ்காகமேந்த வுரவோனமர்ந்து பூசி" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுட் பகுதியிலுள்ள "தமிழ் தழியசாயலவர்" என்பதற்கு "இனிமை தழுவிய சாயலை யுடையவர்" என நச்சினர்க் கினியருரை கூறுமாற்ருற் பெறப்படும். இனிமைப் பண்புணர்த்துந் தமிழ் என்னுஞ்சொல் இனிதாகிய பாஷையெனப் பாஷைமேனின்றது. ஒரு சாரார் "இமிழ், சிமிழ் என ழகரப்பேறுடைய பதங்கள் போலத் தமிழ் என்னுஞ் சொல் தனிமைப்பொருள் குறித்த தமி என்னும் வினையடியாற் பிறந்து வினைமுதற்பொருளுணர்த்திய விகுதி குன்றி ழகரம் விரிந்து தனக்கிணையில்லாப் பாடையெனப் பொருள்பயக்கும்" எனக் கூறுவர். அது பொருந்தாதென்பது திராவிடப் பிரகாசிகையில் 'தமிழ்ச்சொன் முடிபு' என்னும் பகுதியில் சபாபதி நாவலர் கூறுமாற்ருற் பெறப்படுதலின் ஈண்டு யாம் அதைப் பற்றி விரித்துரைத்திலம்.

## ச. தமிழின் பிரிவு

இனி, தமிழ்மொழி செந்தமிழுங் கொடுந்தமிழுமென இருவகைப்படும். அவற்றுள், செந்தமிழ் இயற்றமிழு மிசைத் தமிழு நாடகத் தமிழுமென மூவகைப்படும். அவற்றுள், இயற்றமிழ் எழுத்துஞ் சொல்லும் பொருளும் யாப்பு மணியுமென ஐந்துவகைப்படும்.

## ரு. தமிழ் வழங்கு நிலன்

இனி, தமிழ்மொழி வழங்கு நிலன் வடக்கண் வேங்கடமும், தெற்கட்குமரியும், கிழக்கும் மேற்குங் கடலும் எல்லையாகவுடைய நிலனும். அது,

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து" எனப் பனம்பாரனாரும்,
"வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற்பௌவமென்
றந்நான்கெல்லை யகவயிற்கிடந்த
நூலதுமுறையே வாலிதின் விரிப்பின்" எனக் காக்கைபாடினியாரும்,
"வேங்கடங் குமரிதீம்புனற் பௌவமென்
றிந்நான்கெல்லை தமிழதுவழக்கே" எனச் சிகண்டியாருங் கூறுமாற்றாற் புலனும்.

இனி, முன்னாளிற் குமரியாறென்றோராறும், குமரிமலையென்றோர் மலையும், குமரியாற்றைக் கடல்கொண்டதனாலாகிய குமரிக் கடலென்றோர் கடலும் இருந்தனவென்பது நிரலே தொல்காப்பியப் பாயிரத்திற்கு இளம்பூரணவடிகளும், நச்சினார்க்கினியரும் செய்தவுரையானும்

"அடியிற்றன்னள வரசர்க்குணர்த்தி
வடிவேலெறிந்த வான்பகைபொறாது
பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள
வடதிசைக் கங்கையுமிமையமுங்கொண்டு
தென்றிசையாண்ட தென்னவன் வாழி."

என்னுஞ் சிலப்பதிகார வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் கூறியவுரையானும்,

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம்பறுத்த தண்புனனாட்டு"

என்னுஞ் சிலப்பதிகார வடிகளுக்கு அடியார்க்கு நல்லார் கூறிய வுரையானும் பெறப்படுதலின், ஈண்டுத் தமிழ்

நாட்டுத் தென்னெல்லையாகக் கூறிய 'குமரி' யென்பது யாரோ அன்றி மலையோ அன்றிக் கடலோ வென்பது சந்தேகத்திற்கிடமாகின்றது. ஆதலால், தொல்காப்பியர் நூல் செய்தகாலத்துத் தமிழ்நாட்டுத் தென்னெல்லையாறோ மலையோ கடலோவென்பது ஈண்டு ஆராயத்தக்கது. சிலப்பதிகாரத்து வேனிற்காதையில்,

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம்பறுத்ததண் புனனாட்டு"

என்னுமடிகளின்கீழ், "நெடியோன் குன்றம்—வேங்கடமலை, தொடியோள்—பெண்பாற் பெயராற் குமரி என்பதாயிற்று. ஆகவே தென்பாற் கண்ணதோ ராற்றின்பெயராம். ஆனால், நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமெண்ணாது பௌவமுமென்ற தென்னையெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரை யகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனுமென்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையு முள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினார்காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமா கீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற்பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்துஇரீஇயினான். அக்காலத்து அவர்நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ்

மதுரை நாடும் ஏழ் முன்பாலை நாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ் குன்றநாடும் ஏழ் குணகாரைநாடும் ஏழ் குறும்பனை நாடும் என்னுமிந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வட பெருங்கோட்டின் காறும் கடல்கொண் டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றாரென்றுணர்க. இஃதென்னை பெறுமாறெனின் "வடிவேலெறிந்த வான் பகை பொறாது—பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்—குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள" என்பதனானும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும் பிறவாற்றானும் பெறுதும்" என அடியார்க்கு நல்லாரெழுதுமாற்றால் தொல்காப்பியர் நூல்செய்த காலத்துத் தமிழ்நாட்டுத் தென்னெல்லை குமரிக் கடலென்பதே அவர்க்குக் கருத்தாதல் புலனாகின்றது. தொல்காப்பியப் பாயிர வுரைக்கண், இளம்பூரணவடிகள் "மங்கல திசையாகலின், வடக்கு முற்கூறப்பட்டது. கடல் கொள்வதன் முன்பு, பிறநாடு முண்மையிற் றெற்குமெல்லை கூறப்பட்டது. கிழக்கு மேற்கும், பிறநாடின்மையிற் கூறப்படாவாயின. பிறவிரண்டெல்லை கூறாது இம்மலையு மாறுங் கூறியது அவை தீர்த்தமாகலானும், கேடிலவாதலானும், எல்லாரானு மறியப்படுதலானு மென்பது. இவை யகப்பாட்டெல்லை" எனவும், நச்சினார்க்கினியர், "இவை யிரண்டு மகப்பாட்டெல்லையாயின. என்னை? குமரியாற்றின் றெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல்கொண்டதாகலின்" எனவுங் கூறுமாற்றால் தொல்காப்பியர்நூல் செய்த காலத்துத் தமிழ்நாட்டுத் தென்னெல்லை குமரியாறு என்பதே அவர்கட்குக் கருத்தாதல் புலனாகின்றது. ஆகவே இரு கூற்றும் பொருந்துமாறில்லையாகலின், அவற்றுள்

ஒன்றே வலியுடைத்தாதல் வேண்டும். அஃதென்னை பெறு மாறெனிற், கூறுதும். இறையனு ரகப்பொருட் பாயி ரத்துத் தலைச்சங்கச் செய்தி கூறுமிடத்து, "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக் காலத்துப்போலும் பாண்டிய ஞட்டைக் கடல்கொண் டது" என்னுங் கூறுமாற்ருல் தலைச்சங்க காலத்து ஒரு கடல்கோளும், இடைச்சங்க காலத்து ஒரு கடல்கோ ளும், நிகழ்ந்தனவெனத் தெரிகின்றது. அன்றியும் "கடல் கொள்ளப்பட்ட மதுரை" என்னும் பகுதியையும் "பாண் டியஞட்டைக் கடல் கொண்டது" என்னும் பகுதியையு முற்று நோக்குங் காலத்துத் தலைச்சங்க காலத்து நிகழ்ந்த கடல்கோள் சிறிது என்பதும், இடைச்சங்க காலத்து நிகழ்ந்த கடல்கோள் பெரிதென்பதும் புலனும். ஆகவே,

"வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்னுஞ் சிலப்பதிகார அடிகளாற் பெறப்படுங் கடல் கோளினும் பெரிய கடல்கோள் வேருென்று நிகழ்ந்த தாகத் தெரியாமையால் பஃறுளியாற்றிற்கும் குமரியாற் றிற்கும் இடையே கிடந்த நாற்பத்தொன்பது நாடுகளை யுங் கடல்கொண்டது இடைச்சங்க காலத்திலேயே என் பது துணிபாகின்றது. இங்ஙனந் துணிபாகவே, தொல் காப்பியர் நூல்செய்த காலத்துத்தமிழ்நாட்டுத் தென் னெல்லை குமரியாறென்பதூஉம், இடைச்சங்க காலத்து நிகழ்ந்த கடல்கோளின் பின்பே குமரியாறு கடலாயிற் றென்பதூஉம் தெள்ளிதிற் புலனுதல் காண்க. அன்றியும்,

"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையிற் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே"

என்னுஞ் சிறுகாக்கை பாடினியச் சூத்திரத்துத் தென்றிசைக்குங் கடலெல்லை கூறியதும் பொருந்துமாறறிக.

இன்னும், பறங்கிப்பேட்டை-கோ-இராமசாமிப்பிள்ளையவர்கள், கார் நாற்பது உரைப் புத்தகத்தில், தாம் செய்த பெரியதோர் ஆராய்ச்சியின் பயனாகத் தெளிந்துகொண்டவற்றைச் சுருக்கியெழுதிய, "முச்சங்கம்" என்னும் பகுதியிலுள்ள "இந்தியா நாடு இன்று காணப்படுவதுபோல முன்பிருந்ததில்லை. கன்னியாகுமரிக்குத் தெற்கேயிருக்கும் இந்து மகா சமுத்திரம் அன்று ஒரு பெரிய நாடாயிருந்தது. இப்பெரிய நிலப்பரப்புக்குக் குமரி கண்டமென்று பெயரிட்டனர் பிற்காலத்தோர். இக்குமரிகண்டம் நான்கு பக்கத்திலும் நீராற் சூழப்பட்டிருந்தது. இது வடக்கே விந்தியமலை வரையிலும், கிழக்கே சாவகத்தீவு வரையிலும், தெற்கே தென்கடல் வரையிலும், மேற்கே மடகாஸ்கர் தீவு வரையிலும் விசாலித்திருந்தது" என்றும், "அக்குமரிகண்டம் அழிந்தது பல்லாயிர ஆண்டுகட்கு முன்பேயாகும். குமரிகண்டம் அழிவடைந்த பின்பு எஞ்சிநின்ற நிலப்பாகம் மூன்றில் குமரிநாடு ஒன்று. இக்குமரி நாடு தென்னிந்தியாவின் தொடர்ச்சியாயிருந்தது. இக்குமரி நாட்டுக்கு வடக்கே குமரியாறும் தெற்கே பஃறுளியாறும் ஓடிக்கொண்டிருந்தன. இக்குமரிநாடு நாற்பத்தொன்பது சிறு நாடுகளாகப் பகுக்கப்பட்டிருந்ததென்ப. இங்கு வாழ்ந்துவந்தவரே தமிழராவர். அவர்கள் கல்வியில் தலைசிறந்து விளங்கினர். அவர்களுடைய அரசர்களுக்குப்

பாண்டியரென்று பெயர். அவர்களுக்குத் தலைப்பட்டண மாயிருந்தது தென் மதுரை. அவ்வரசர்கள் புலவர்களை ஆதரித்து வந்தனர். அப்புலவர் பல நூல்களை யியற்றி னர். அவை எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் இன்னும் பலவுமென்ப. இப்புலவர் கூட்டத்தையே பிற்காலத்தோர் தலைச்சங்க மென்றனர்" என்றும், "இக்குமரிநாட்டுக்குக் கிழக்கே சுமார் கி. மு. 2387-ம் ஆண்டில் ஒரு குழப்பமுண்டாகிக் கடல் பொங்கி அந்நாட்டின் கீழ்ப்பகுதியை அழித்து விட்டது தமிழகம் சிதையவே தமிழரில் ஒரு சிலர் கடல் கோளுக்கஞ்சி, வேவ்வேறு நாட்டிற் குடியேறினர். மற் றையோர் குமரியாற்றிற்கு வடக்கே சென்று தென்னிந் தியாவில் தங்கினர். அக்காலத்து நேர்ந்த கடல்கோளினல் அப்போது வழங்கிவந்த நூல்கள் முதலியயாவும் இறந்தன வாதலின், குமரிநாட்டை யாண்ட பாண்டியர்களின் எண் ணுவது, பெயராவது அவர்களாண்ட கால அளவாவது இன்று நமக்குத் தெரியவில்லை" என்றும், "குமரியாற் றிற்கும் தாமிரபருனிக்கும் இடையில் தங்கிய தமிழர்க ளுக்குத் தலைப்பட்டணமாயிருந்தது கபாடபுரம், அரசர் கள் முன்போலவே புலவர்களை ஆதரித்து வந்தார்கள். இப்புலவர் கூட்டமே இடைச்சங்கமெனப்பட்டது. இக் காலத்தில் இந்தியாவின் வடநாட்டு ஆரியர்களுக்கும் தென்னாட்டுத் தமிழர்களுக்கும் தொடர்புண்டாயிற்று, அகத்தியர் தென்னாடு புகுந்து தமிழை வளம்படுத்தினர். அகத்தியமென்னு மிலக்கணநூலை அவர் இயற்றியருளி னார். மற்றைப் புல்வர்களாலியற்றப்பட்டவை கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை யகவலும், மா புராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமுமென்பன. ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்விடைச்சங்கத்திறுதியிற்

ருரேன்றித் தொல்காப்பியமென்னும் இலக்கணநூலை யியற்றினர். அக்காலத்தே ஒரு கடல்கோளுண்டாகிக் குமரி நாட்டை யழித்துவிட்டது. அஃதாவது தொல்காப்பியர் காலமாகிய கி. மு. பதின்மூன்றும் நூற்றுண்டில் அரசு புரிந்திருந்த முடத்திருமாறன் காலத்தே அது நிகழ்ந்தது'' என்றும் வரும்பகுதியானும், சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களெழுதிய கலித்தொகைப் பதிப்புரையிலுள்ள "தமிழுக்குக் காலாந்தரத்தில் இரண்டு பெரும் பூகங்களால் இரண்டு பேரிடையூறுகள் நிகழ்ந்தன, குமரியாறும் அதன் தெற்கணுள்ள நாடுகளுஞ் சமுத்திரத்தின்வாய்ப்பட்டமிழ்ந்தியபோது தமிழ்ச் சங்கத்திற்கு ஆலயமாய்ச் சர்வ தமிழ்க் கிரந்த மண்டபமாயிருந்த கபாடபுரம் அதலிகணிருந்த எண்ணுயிரத்தொருநூற்றுநாற்பத்தொன்பது கிரந்தங்களோடு வருணபகவானுக்கு ஆசமனமாயிற்று. பாண்டிய நாட்டின் வடபாலில் ஆங்காங்குச் சிதறுண்டு குலாவிய சாதாரண சனவிநோதார்த்தமான சில கிரந்தங்களும், பள்ளிக்கூடங்களில் சிறுவர்தம் கல்வித்தேர்ச்சிக்குரியவாய் வழங்கிய சிறு நூல்களும் சில்லறை வாகட சோதிடாதிகளுமே பிற்காலத்தார் கைக்கு எட்டுவனவாயின,

"எரணவு ருவம்யோக மிசைகணக்கிர தஞ்சாலந்
தாரண மறமே சந்தந்தம்பநீர் நிலமுலோகம்
மாரணம் பொருளென்றின்ன மானநூல் யாவும்வாரி
வாரணங்கொண்டதந்தோ வழிவழிப்பெயருமாள''

எனப் புலம்பிய நமது முன்னோரிடத்திலிருந்து நாமடைந்த பிதிரார்ச்சிதம் வெறும் பெயரினுஞ் சிலவேயாம்.'' என வரும் பகுதியானும் எங்கூற்று வலியுறுமாறுங் கண்டுகொள்க.

அங்ஙனேல், அடியார்க்கு நல்லார் கூற்றிற்கு யாது கூறுவதெனிற், கூறுதும். கடல்கோள் நிகழ்ச்சி கூறத்

தொடங்கியவர், அது கூறி முடித்துப் பின்பு "இஃ தென்னை பெறுமாறெனின்" எனத் தொடங்கி, "வடிவே லெறிந்த வான்பகை பொறுது-பஃறுளியாற்றுடன் பன் மலையடுக்கத்துக்—குமரிக்கோடும் கொடுங்கடல்கொள்ள" என்பதனானும், கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முகவுரையானும், பிறவாற்றானும் பெறுதும்" எனக் கூறுதலானும், அவற்றை நுணுகி நோக்குவார்க்கு அவ்வாறுதல் புலனாகாமையானும் சரித்திர ஆராய்ச்சியில்லாத அக்காலத்தில் காலமுறையைக் கருதாமல் முன்னடந்ததைப் பின்னாகவும் பின்னடந்ததை முன்னாகவும் அவர் தொகுத்துக் கூறியிருத்தல் கூடுமெனக் கூறுவதன்றி வேறு சொல்லுதற்கில்லையென் பது.

இனி, கா. சுப்பிரமணியபிள்ளை யென்பார் தொல்காப்பிய முகவுரைக்கண், ஆசிரியர் தொல்காப்பியர் காலத்துத் தமிழ்நாட்டுத் தென்னெல்லை குமரியாறோ அல்லது குமரிமலையோ என நுண்ணிதினாராய்ந்து குமரியாறென்றே முடிவுசெய்துளாராயினும், அவருடைய ஆராய்ச்சி முறை சில பகுதியிற் பொருந்துவதாயில்லை யாகலின், அவற்றை யீண்டறியத் தருதும். பிள்ளையவர்கள் "குமரியாற்றைக் கடல்கொண்ட பின்னர்க் குமரியென்ற பெயராலே தென்னெல்லையாகிய கடல் சுட்டப்பட்டதென்றும், பஃறுளியாறு நெடியோனென்னும் பாண்டியனுடைய தென்றும், பஃறுளியாறும் குமரிக்கோடும் கடல்கொள்ளப் பட்டன வென்றவிடத்துக் குமரியாற்றை யாசிரியர் குறிக்கவில்லையென்றும், குமரியாறும் பஃறுளியாற்றின் வேறாகவே யிருந்ததென்று தெரிகிறதால் இரண்டிற்கும் நடுவே நாடுகளிருந்தனவென்று யூகித்தல் கூடுமென்றும்,

புறநானூற்றிற் கூறிய 'நெடியோன்' என்னும் பாண்டியனே தொல்காப்பியப் பாயிரத்துட் சுட்டிய 'நிலந்தரு திருவிற் பாண்டிய' னென்று சிலர் யூகிக்கின்றாரென்றும், அவர்கள் 'நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோனும்பல்' என்ற மதுரைக்காஞ்சியை மேற்கோளாக வுரைக்கின்றனரென்றும், நிலந்தருதிருவிற் பாண்டியன் என்னுஞ் சொற்றொடரின் பொருள்;

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

என்னும் (முல்லைக்கலி கoச—வது) பாட்டினடிகளின் வைத்து யூகிக்கற் பாலதென்றும், தன்னாட்டைக் கடல் கொள்ளப் பிற அரசர் நாட்டைத் தன் குடிகட்கு வென்று தந்த சிறப்புடைய பாண்டியன் காலத்தே தொல்காப்பியமாங்கேற்றப்பட்டதென்றும், இப்பாண்டியனை 'தென்னவன்' என்று கலித்தொகையாசிரியர் கூறியவாறே இளங்கோவடிகளும் கடல்கொண்ட செய்தி கூறுமிடத்துத் 'தென்னவன்' என்று விளிக்கின்றாரென்றும், இத்தென்னவனும் பஃறுளியாற்றையுடைய நெடியோனும் ஒரே அரசனென்று கொள்ளின், மன்னன் ஒருவனே கடல்கோட்கு முன்னும் பின்னும் நெடுங்காலமாக அரசாண்டானென்பது முடியுமென்றும், தென்னவன் காலம் கடல்கோள் நடந்த காலமாகத் தெரிதலால் தொல்காப்பியர் காலமும் அக்காலமே என்பது தெளிவு என்றும், நிலந்தருதிருவிற் பாண்டியனெனப் பாயிரத்துள் விதந்தோதுதலின் அங்ஙனம் நிலந்தந்த பேருதவிக்குப் பின்னேயே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டதென்று கொள்ளுதல் இயைபுடையதேயென்றும், கடல்கோட்குப்பின் நூலி

யற்றப்பட்டதென்று கொள்ளுமிடத்துக் 'குமரி' என்பதற்குக் 'குமரியாறு' என்றே பொருள்கொள்ளுதல் வேண்டுமென்றும், கடல்கோள் முடிந்து பிறநாடுகள் கைக்கொள்ளப்பட்டுப் பாண்டியன் அரசுநிலைத்த பிறகே நிலந்தருதிருவிற் பாண்டியனென்ற பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டுமென்றும், அப்பெயர் சிறப்புப்பாயிரத்துட் கூறப்படுதலின் ஆசிரியர் நூல்செய்த காலமும் கடல் கோட்குப் பின்னேயாதல் வேண்டுமென்றும், ஆதலால், அக்காலத்தே 'குமரியாறு' தமிழ்நாட்டுத் தென்னெல்லையாக இருந்ததென்று கொள்ளுதல் பெரிதும் பொருத்தமானது என்றும், கடல்கோட்குப் பின் முதன் முதற் செய்யப்பட்ட முழு முதனூல் தொல்காப்பியமென்றும், இடைச்சங்கத்திற்கு நூல் தொல்காப்பியமென்று களவியலிற் கூறப்பட்டிருக்கிறதென்றும், அதனுள் முதற் சங்கமிருந்தார்க்கு நூல் தொல்காப்பியமென்று கூறப்படவில்லையென்றும், அதனைக் கருதுமிடத்துத் தொல்காப்பியம் கடல்கோட்குப்பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று தோன்றுகின்றதென்றும், ஆசிரியர் தொல்காப்பியர் ஜமதக்கினியின் புதல்வராய்ப் பரசுராமருக்கு உடன் பிறப்பென்று கருதுவார்க்கு இது மிகவும் ஒத்ததேயென்றும், அங்ஙனம் கொள்ளுமிடத்துத் தமிழ் நாட்டுக்குத் தென்னெல்லை 'குமரியாறு' என்பவர்களுடைய கொள்கையும் வலியுறுகிறதென்றும், அஃதெவ்வாறெனில், பஃறுளியாற்றைக் கடல்கொண்ட காலத்துக் குமரிமலையின் பெரும்பாகமும் அழிந்துபோயதென்றும், குமரியாறு தொடங்கும் பகுதியும் குமரியாறும் கடல் கொள்ளப்படாதிருந்தனவென்றும் கூறுகின்றார். பஃறுளியாறுங் குமரிக்கோடுங் கடல்கொள்ளப்பட்டனவெனவே பஃறுளியாறும், குமரிமலையும் அம்மலையிற்றோன்றிய குமரி

யாறும் கடல்கொள்ளப்பட்டனவென்பது தானே பெறப்படு தலானும், பஃறுளியாறும் குமரிக்கோடுங் கடல்கொள்ளப் பட்டனவென்பதைக் கொண்டு பஃறுளியாற்றிற்கும் குமரி யாற்றிற்குமிடையேயுள்ள நாற்பத்தொன்பது நாடுங் கடல்கொள்ளப்பட்டனவென்று கொள்ளுமாறுபோலக் குமரிக்கோட்டைச் சார்ந்துள்ள குமரியாறும் கடல்கொள் ளப்பட்டதென்றல் பொருத்தமாமாகலானும், நெடியோ னென்னும் பாண்டியனும் நிலந்தருதிருவிற் பாண்டிய னும் ஒரு அரசனேயென்றற்கு யாதோர் பிரமாணமு மின்மையானும், 'நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார் பின் நெடியோன்' என்பது பல்வகை யேதுக்களோடு தானுமொன்றாய் நின்று எடுத்துக்கொண்ட காரியத்தைச் சாதிக்குமேயன்றித் தானே தக்கதோர் காரணமாயி ருந்து காரியத்தைச் சாதிக்கும் வலியிலதாமாகலானும், "மலிதிரை யூர்ந்து" என்னுங் கலித்தொகைச் செய்யுள் 'நிலந்தருதிருவிற் பாண்டியன்' என்னுஞ் சொற்றொட ரின் பொருளே யுணர்த்திற்றென்றற்கு யாதோர் பிரமா ணமு மின்மையானும், கடைச்சங்க காலத்திலுள்ள கலித் தொகையில் முதற்சங்க காலத்துள்ள நிலந்தருதிருவிற் பாண்டியனுடைய செய்தி கூறற்கோரியை பின்மையா னும் தலைச்சங்க காலத்து நிகழ்ந்த கடல்கோளில் குமரி மலையின் பெரும் பாகமும் பஃறுளியாறுமழியக் குமரி யாறு தொடங்கும் பகுதியும் குமரியாறும் அழியாதிருந் தனவென்றதற்கு ஒரு பிரமாணமேனு மின்மையானும் குமரிக்கோட்டின் ஒரு பகுதி ஒருகாலத்தும் அதன் மற் றொரு பகுதியும் குமரியாறும் மற்றொரு காலத்தும் கடல் கொள்ளப்பட்டனவென்றல் பொருத்தமில் கூற்றாமாகலா னும் அவர் கூறுவது பொருந்தாதெனவறிக.

இனி, "தமிழ்நாட்டெல்லை கூறுமிடத்து அந்நாட்டிற்குத் தெற்கெல்லை குமரியாறென்றும், "குமரியோராற்றின் குறியென்பது தமிழறிஞர் பலருமறிந்ததே" என்றுங் கூறுகின்றீர்கள். குமரியாறெனப் பலரும் வழங்குவது மெய்; ஆயினும் குமரியோராற்றின் குறியென்பதற்கு ஆதாரமென்னை? பழைய நூல்களில் குமரி ஓர் ஆறு என்று கூறியுள்ளதாக எனக்கு ஞாபகமில்லை. சிலப்பதிகாரத்து வேனிற்காதையில், "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்றும், காடுகாண் காதையில், "பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும்" என்றும் கூறியுள்ளது. இவற்றால், குமரியென்பது ஒரு கடற்கரையின் பெயராதல் வேண்டும். கோடு, கரை அல்லது முனையென்று பொருள்படும். "கொண்டல் பயின் மணற்கோடுசூழ்கோடிக் குழகர்தமை" (பெரியபுராணம்—சம்பந்தர்—622.) என்று வருதல் காண்க. கோடி ஒரு மணல்முனை. அது போலவே குமரியும் ஒரு முனை. "பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு" என்னுமிடத்துக் கோடு என்பதை மலையென்று கொள்ளலாம், அவ்வாறு கொண்டால், அது வேனிற் காதையில், 'தொடியோள் பௌவம்' என்றதனோடு மாறுபடும். காடுகாண் காதையில் "வடிவேலெறிந்த வான்பகை பொறாது—பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்—குமரிக்கோடுங் கொடுங்கடல்கொள்ள" என்று கூறியது இங்கே ஆராயத்தக்கது. ஒன்றைப் பஃறுளி யாறென்றும் மற்றொன்றைக் குமரிக் கோடென்றும் விகற்பித்தவதனால், குமரி என்பது யாறு ஆகாது, மற்றொன்றாதல் வேண்டும். கோடென்பதை மலையென்று கொள்ளலாகாதென்று மேற்கூறினமையின், கோடு என்பது இங்கே கரையை அல்லது முனையையே குறித்ததாதல் வேண்டும். ஆதலால் "வடவேங்கடந் தென்

குமரி" என்னுமிடத்து, வடக்கண் வேங்கடமுந் தெற் கட் குமரியாறும் என்று பொருள் கொள்ளாது, வடக் கண் வேங்கட மலையும் தெற்கட் குமரிக்கோடும் என்று பொருள்கொள்ளல்வேண்டும். தெற்கே குமரியென்றோர் யாறு இருந்ததென்பதற்கு ஆதாரமொன்றுமில்லை. தெற் கே தமிழ்நாட்டிலே பல்லாயிர வருடங்கட்கு முன் அப் படி ஒரு யாறு இருந்ததாயின், அதன் பெயர் தமிழ் மொழியாயன்றி அன்னிய பாஷை மொழியாய் இருந்தி ருக்க மாட்டாது. குமரியென்பது தமிழ்மொழியன்று; வடமொழி. இப்பெயர் செந்தமிழ்நாட்டைக் கடல்கொண் டபின்னரே, ஆரியர் தமிழ்நாடு வந்து ஆரியமொழி தமிழ் மொழியோடு கலந்தபின் தோன்றியிருத்தல் வேண்டும். குமரிக்கோட்டுக்குத் தெற்கேயிருந்த நாடுகளைக் கடல் கொண்டது சரித்திர காலத்தன்று; அது நிகழ்ந்து பல்லா யிர வருடங்களாயின. தொல்காப்பியமியற்றியது ஆரியர் தமிழ்நாட்டுவந்து ஆரியமொழி தமிழ்மொழியோடு கலந் ததன்பின்; அதாவது, ஏறக்குறைய இரண்டாயிர வரு டங்கட்குமுன்பன்று. ஆகலால் தொல்காப்பியப் பாயி ரத்துக் கூறப்பட்ட தெற்கெல்லையாகிய குமரி என்பது குமரியாறன்று, குமரிக்கோடே" எனத் திருவாளர் தி. த. கனகசுந்தரம்பிள்ளை யவர்கள், 'தமிழ் வரலாறு' என்னும் நூலியற்றிய தஞ்சை சீனிவாசபிள்ளையவர்கட் கெழுதிய கடிதத்தில் வரைந்திருக்கின்றார்கள் அது பொருந்தாது, என்னை காரணமெனிற், கூறுதும். பண்டைக் காலத்துக் குமரியென்னும் பெயருடன் ஓர் யாறும், ஒரு மலையும், ஒரு கடலும் இருந்தனவென முன்னரே கூறிப்போந்தா மாகலானும், 'தொடியோள் பௌவம்' என்பதற்குக் குமரிக் கடலெனப் பொருள்கொண்டமையால் 'குமரிக்கோடு' என் பதற்குக் குமரிக் கடற்கரை அல்லது குமரிமுனையெனப்

பொருள்கொள்ள வேண்டுமென்று கருதுதல் பொருந்தாதாகலானும், கோடு என்பது கரை அல்லது முனையெனப் பொருள்படுவதாயினும் குமரிக்கோடு என்னுமிடத்துக் குமரிக் கடற்கரை அல்லது குமரி முனை யென்று பொருள்கோடல் பொருந்தாதென்பது 'பன்மலையடுக்கத்து' என்னும் விசேடணத்தாற் பெறப்படுதலானும், குமரிக்கோடென்பதொன்றையும், தொடியோள் பௌவமென்பது மற்றொன்றையுங் குறிப்பதென்பது அடியார்க்கு நல்லார் அப்பகுதிகட்குக் கூறிய பொருளாற் பெறப்படலாற் குமரிக்கோடு என்பதற்குக் குமரிமலை யென்று பொருள்கோடல் 'தொடியோள் பௌவம்' என்பதனோடு மாறுபடுமென்று கூறுதல் பொருந்தாதாகலானும், "வடிவேலெறிந்த வான்பகை பொறாது—பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்—குமரிக் கோடுங் கொடுங்கடல்கொள்ள" என்பது பஃறுளியாறுங் குமரி மலையும் கடல்கொள்ளப்பட்டனவெனப் பொருள்பட்டுக் கடல்கோள் நிகழ்ந்த காலச் செய்தியையும், "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்" என்பது வேங்கட மலையுங் குமரிக்கடலும் எனப் பொருள்பட்டுக் கடல்கோளின் பிற்காலச் செய்தியையுங் குறித்தலானும், "வடாஅதுபனிபடு நெடுவரை வடக்குந்—தெனாஅதுருகெழுகுமரியின் றெற்குங்—குணாஅது கரைபொருதொடுகடற் குணக்குங்—குடாஅதுதொன்று முதிர்பௌவத்தின் குடக்கும்" எனவும், "தென்குமரி வடபெருங்கல்—குணகுட கடலாவெல்லை" எனவும் வரும் புறநானூற்றுச் செய்யுள்களினுரையில் 'குமரி' என்பதற்குக் குமரியாறு என்றுரையெழுதப்பட்டிருத்தலானும், அவ்வுரை யாதோராதாரமுமின்றி யெழுதப்பட்டதென்று கூறல் சாலாதாகலின், தெற்கே குமரியென்று ஒரு ஆறு இருந்ததென்பதற்கு

ஆதாரமொன்றுமில்லை யென்றல் பொருந்தாதாகலானும் தொல்காப்பியம் இடைச்சங்கத்தார்க்கு நூலெனஇறையனாகப்பொருட் பாயிரத்துக் கூறப்பட்டமையானும், இடைச்சங்க காலத்துப் பாண்டியநாட்டைக் கடல்கொண்டதென ஆண்டே கூறப்பட்டிருத்தலானும் அவர் கூற்றுப் பொருந்தாமை காண்க. ஈண்டுக் கூறியவாற்ருல் தலைச்சங்க நாட்டொடங்கி இடைச்சங்க காலத்து நிகழ்ந்த கடல்கோள் வரையும் தமிழ் நாட்டுத் தென்னெல்லையாகவிருந்தது குமரியாறு என்பதும், அதன் பின்பு குமரிக் கடல் என்பதும் பெற்ரும் என்பது.

இனி, செந்தமிழ்நிலம் இப்பொதுவெல்லையுள் வைத்து வரைந்துகொள்ளப்படும். தொல்காப்பியவுரையாசிரியர்களாகிய சேனவரையரும், நச்சினர்க்கினியரும், “செந்தமிழ் நிலமாவது வைகையாற்றின் வடக்கும் மருதயாற்றின் றெற்குங் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்” எனக் கூறுதலானும், இலக்கணவிளக்க நூலாசிரியராகிய வைத்தியநாத தேசிகரும் அங்ஙனமே கூறுதலானும்,

“செந்தமிழ்நாடே
மன்றவாணன் மலர்திருவருளாற்
றென்றமிழ்மகிமை சிவணியசெய்த
அடியவர்கூட்டமு மாதிச்சங்கமும்
படியின்மாப்பெருமை பரவுறுசோழனுஞ்
சைவமாதவருந் தழைத்தினிதிருக்கு
மையறுசோழ வளநாடென்ப.”

என்னும் பண்டைச் செய்யுளானும், செந்தமிழ்நிலஞ் சோணுடாயிற்று. சிவஞானமுனிவர்,

“காசியினின் றும்போந்து கம்பர்தா மருளப்பெற்று
மாசிலாக் கச்சிமூதூர் மன்னி வீற்றிருந்துபூமே

லாசிலாத் தமிழ்பரப்பி யருந்தமிழ்க் குரவுபூண்ட
தேசினன் மலையவெற்பிற் குறுமுனிதிருத்தாள்போற்றி"

எனக்காஞ்சிப் புராணத்துக் கூறுதலானும், கச்சியப்பசிவா சாரியார்,

"செந் தமிழ்க்கு வரம்பெனச் செப்பிய
முந்து காஞ்சியின் முற்றுணர் மேலவர்
கந்த னெந்தை கதையினை நூன்முறை
தந்தி டென்னத் தமியனி யம்புகேன்."

எனக் கந்தபுராணத்துக் கூறுதலானும், செந்தமிழ் நிலம் தொண்டைநாட்டுக் காஞ்சிமாநகராயிற்று.

"செந்தமிழ்நாடே
சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டிய னெனுந் தமிழ்நாடனுஞ்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு
மங்கலப் பாண்டி வளநா டென்ப."

என்னும் பண்டைச் செய்யுளால் செந்தமிழ்நிலம் பாண்டி நாடாயிற்று. ஈண்டுக்கூறிய வொவ்வோர் பகுதியும் ஒன்று மற்றொன்றைத் தழுவாது ஒவ்வோர் நிலத்தையே செந்த மிழ் நிலனாகக் கூறுதலின் இம்மூன்று நிலனையும் செந்தமிழ் நிலனெனக் கூறல் பொருந்தாது. ஆகவே, இம்மூன்று நிலனுள் ஒன்றே செந்தமிழ் நிலனாதல் வேண்டும். அது தான் யாதெனிற், கூறுதும். காய்சினவழுதிமுதல் உக்கி ரப்பெருவழுதியீறாகவுள்ள பல பாண்டிய மன்னர் முன்னா ளிற் றந்நாட்டகத்துச் சங்கமிரீஇப் புலவர்களைக்கொண்டு செந்தமிழை வளர்த்தாரென இறையனாரகப்பொருளுரை யானும், பிறவற்றானு மறியப்படலானும், திருக்கோவை யார், பெரியபுராணம், கல்லாடம் முதலிய நூல்களிலுள்ள சில செய்யுள்களாற் பாண்டிநாடு செந்தமிழ் வளர்தற் கிடனாயிருந்ததென வறியப்படலானும், முன்னாளிற் சோ

ளுட்டகத்துச் செந்தமிழ்ச் சங்கமொன் றிருந்ததென்றற் குச், "செந்தமிழ் நாடே—மன்றவாணன் மலர் திருவரு ளால்" என்னுஞ் செய்யுளொன்றேயன்றி வேறோர் பிர மாணமுமின்மையானும், "செந்தமிழ் நிலமாவது யாதெ னின்; "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்—சவுந் தர பாண்டியனெனுந் தமிழ் நாடனுஞ்—சங்கப் புலவருந் தழைத்தினிதிருக்கு—மங்கலப் பாண்டிவள நாடென்ப" இவ்வாறன்றிச் செந்தமிழ்நிலம் வையையாற்றின் வடக் கெனக் கூறுவாருமுளர்; கொடுந்தமிழ் நிலத்துப் புனனு டெனப்படுவது சோணுடாதலானும், பாண்டியனையே தமிழ் நாடனெனச் சான்றோர் கூறுதலானும் அஃதுரை யன்றென்க" என நன்னூல் விருத்தியுரை யகத்துச் சங் கர நமச்சிவாயப் புலவர் கூறுதலானும், அகத்திய முனி வர் காஞ்சி நகரிற் சின்னுள் வதிந்து கம்பரை வழிபட்டு அவரருள் பெற்றுப் பின்பு பொதிய வெற்படைந்து ஆண் டுச் செந்தமிழைப் பரப்பினுரெனவே பலநூலானு மறி யப்படலானும், செந்தமிழ் முனிவராகிய அகத்தியர் சின் னுள் வதிந்த காரணத்தாற் காஞ்சிநகர் செந்தமிழ் நில னெனச் சிறப்பித்துக் கூறப்பட்டதேயன்றி, உண்மை யிற் காஞ்சிநகர் செந்தமிழ் நிலனன்றுமாகலானும் பாண்டி நாடே செந்தமிழ்நிலனுமென்பது.

இனி, சேரசோழ பாண்டிய மன்னர்களைத் 'தமிழ் நாட்டு மூவேந்த' ரென யாண்டும் வழங்குதலானும், கடைச்சங்கப் புலவர் சீத்தலைச் சாத்தனுர் திருக்குறளு போற் காதத்துள்,

"மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றூன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்"

என முத்தமிழையும் அம்மூவர்க்கு முடைமையாக்கிச் செந்தமிழுத்தர வேதத்தினை அவர்த 'முடிமேற்றூர்' எனப் பொதுவாக வோதுதலானும், பத்துப்பாட்டு எட்டுத் தொகை முதலிய சங்கவிலக்கியங்களுட் சில அம்மூவர் மேலவாகியும் சில ஒவ்வொருவர் மேலவாகியும் வருத லானும், ஆளுடைய பிள்ளையார் முதலிய சமயாசிரியர் நால்வரும் சேரமான் பெருமாண் முதலிய மற்றையுண்மை நாயன்மாரும் அருளிச்செய்த திருநெறிச் செந்தமிழ்வேத முதலிய திருவருட் பாடல்கொண்ட திருத்தளிக டமிழ் நாட்டுள் ஒன்றன்பாலதாதலின்றி, மூந்நாட்டகத்து முண் மையானும், பிறவாற்றானும், செந்தமிழ்நிலந் தமிழ் மூந் நாட்டகத்து மொப்பக் கொள்ளப்படும்" எனத் திராவி டப் பிரகாசிகை யுடையார் கூறுவராலெனின், அற்றன்று. தமிழ்நாடு என்பது செந்தமிழ் நாட்டையேயன்றிக் கொடுந் தமிழ் நாட்டையுங் குறிக்குமாகலின் 'தமிழ்நாட்டு மூவேந் த" ரென்னும் வழக்குச் செந்தமிழ்நாட்டு மூவேந்தரெனப் பொருள் படாமையின் அவ்வழக்கினால் ஈண்டைக்காவ தோர் பிரயோசனமின்மையானும், சேரனையுணர்த்தும் குட்டுவன் என்னுஞ்சொற்குக் குட்டநாடுடையவன் என் பது பொருளாகலானும், "தென்பாண்டி குட்டங் குடங் கற்கா வேண்பூழி" என்னுஞ் செய்யுளாற் குட்டநாடு கொடுந்தமிழ் நாடென வறியப்படுதலின் சேரன் கொடுந் தமிழ்நாட்டையுடையவனென வறியப்படலானும், கொடுந் தமிழ்நாட்டுளொன்றாகிய புனனாடே சோணாடென முன் னர்க் கூறியவாற்றாற் பெறப்படலானும், "மும்மலையு முந் நாடும்" என்னுஞ் செய்யுளில் முப்பாலை மூவேந்தர்க்கு முரித்தாக்கிக் கூறியது தமிழ்நூலென்னும் பொதுமை பற்றியேயன்றி, மூவேந்தருஞ் செந்தமிழ்நாட்டு மன்ன ராகலின் செந்தமிழ் நூலாகிய முப்பால் அம்மூவர்க்கு

முரியதென்னுஞ் சிறப்புப்பற்றியன்று மாகலானும், சேர சோழ பாண்டிய மன்னர் தமிழ் மன்னராகலின் தம்செய் யுளின் அருமை பெருமைகளை யறிந்து தம்மை நன்கு மதிப்பரென்னுங் கருத்துடன் செந்தமிழ்ப் புலவர்களாற் செய்யப்பட்ட செய்யுள்களே சங்க விலக்கியங்களுள் அர சரைக் குறித்து வரும் செய்யுளாகவிருத்தலின் அது கொண்டு சேரநாடு சோணுடுகளைச் செந்தமிழ் நாடென்று கூறல் பொருந்தாதாகலானும், ஆளுடைய பிள்ளையார் முதலியோ ரருளிச்செய்த பாடலைக்கொண்ட 'தலங்கள் தமிழ்நாடு மூன்றன்கண்ணுமேயன்றிப் பிறநாடுகளினு மிருத்தலானும் அது பொருந்ாதென்பது.

இனி, கொடுந்தமிழ் வழங்கு நிலம் தமிழ்நாட்டகத் துச் செந்தமிழ்ப் பாண்டி நாடொழித்தொழிந்த தென் பாண்டிநாடும், 'குட்டநாடும், குடநாடும், கற்காநாடும், வேணுடும், பூழிநாடும், பன்றிநாடும், அருவாநாடும், அரு வாவடதலை நாடும், சீதநாடும், மலைநாடும், புனனுடும் என்னும் பன்னிரண்டு நாடுமாம். அது,

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனுடு செந்தமிழ்சே
ரேதமில் பன்னிருநாட் டெண்"

என்னும் பண்டைச்செய்யுளா னறியப்படும். சேனுவரை யரும் நச்சினார்க்கினியரும், "பன்னிரு நிலமாவன பொங் கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குட நாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலைநாடு எனச் செந்தமிழ் நாட் டுத் தென்கீழ்பான் முதலாக வடகீழ்பா லிறுதியாக வெண்ணிக்கொள்க" எனக் கூறுவர். "தென்பாண்டி

குட்டம்" என்னுஞ் செய்யுளிலுள்ள வேணுடும், புனனு டும் அவர் கூற்றுட் காணப்படவில்லை. அவற்றிற்குப் பதி லாகப் பொங்கர்நாடும், ஒளிநாடுமென வேறிரண்டு நாடு கள் கூறப்பட்டுள்ளன. திருவாளர்களான த. கனகசுந் தரம்பிள்ளையும் சபாபதி நாவலரும் முதலிய வறிஞர் பல ரும், தொல்காப்பிய வுரையாசிரியர்களாகிய சேனுவரை யர் நச்சினுர்க்கினியர் முதலியோர் கூற்றே இவ்விஷயத் திற் பொருத்தமுடைத்தாகக் கருதுகின்றனர். ஆயினும், அவர் கூற்றுப் பொருத்தமுடைத்தாக யாம் கருதவில்லை. என்னை காரணமெனிற், கூறுதும். கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டனுள் வேணுடும், புனனுடும் அடங்கியுள்ளன வென்பதற்குத் "தென்பாண்டி குட்டம்" என்னும் பண் டைச் செய்யுள் பிரமாணமாகவிருத்தலானும், கொடுந் தமிழ்நாடு பன்னிரண்டனுள் பொங்கர் நாடும், ஒளிநாடும் அடங்கியுள்ளனவென்பதற்கு அவர் வாய்மொழியேயன்றி, வேறு பிரமாண மொன்று மின்மையானும், சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்னு மூந்நாடுந் தமிழ்நாட்ட கத்துச் சிறந்த நாடாமாகலானும், அவற்றுள் சோழ நாட்டையும், மலைநாடாகிய சேரநாட்டையும் நிரலே செந் தமிழ் நாடெனவுங் கொடுந்தமிழ் நாடெனவுங் கூறியுள் ளாராயினும் தமிழ்நாட்டறிஞரெவாலும் செந்தமிழ்நாடெ னப் புகழப்படும் பாண்டிநாட்டைச் செந்தமிழ் நிலனென் ருவது கொடுந்தமிழ் நிலனென்ருவது கூறிற்றிலராகலா னும், "பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோனடி போற்றி" என்னுமடியிலுள்ள 'பூழியர் கோன்' என்பது பாண்டியனைக் குறித்தலின் கொடுந்தமிழ்நாடு பன்னிரண் டனுளொன்ருகிய 'பூழிநாடு' என்பது பாண்டிநாடென வறியக் கிடப்பவும், பாண்டிநாடு கூறப்பட்டிலதென்ற

5

தென்னையெனின், "பூழியனென்று சேரனுக்கும் பாண்டியனுக்கும் பெயருண்டு. "பூழியனுதியன் கொங்கன் பொறையன்" என்பது பிங்கலம். "பூழியர் கோவேபொலந்தேர்ப்பொறைய" என்பது பதிற்றுப்பத்து, 84. இவையிரண்டுஞ் சேரனைக் குறித்தன. "பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோனடி போற்றி" என்பது சேக்கிழார் புராணம், 6. "பூழியர் தமிழ்நாட்டுள்ள பொருவில் சீர்ப்பதிகளெல்லாம்" என்பது பெரிய புராணம், சம்பந்தர், 601. "பூழியர் வண்டமிழ்நாட்டு" என்பது பெரிய புராணம், சம்பந்தர், 653. இவை மூன்றும் பாண்டியனைக் குறித்தன. இவ்விருவருக்கும் பூழியன் என்று பெயர் வந்தது இவர்கள் ஒவ்வொரு காலத்துப் பூழி நாட்டை யாண்டமையின். ஒருகாலத்துச் சேரனதாயும் மற்றொருகாலத்துப் பாண்டியனதாயும் இருத்தற்குப் பூழி நாடு அவ்விருவர் நாட்டுக்கும் இடையில் உள்ளதாதல் வேண்டும். அஃதாவது பாண்டிநாட்டுக்கும் சேரநாட்டுக்கும் இடையில், திருவெட்டாற்றுத் தாமிரபர்ணி நதி சங்கமத்திலிருந்து மூவாற்றுப் புழைவரையிலுள்ள நாடே பூழிநாடுபோலும்; இங்கே பூழியென்றோரூருளது. அது திருநெல்வேலிக்கும் திருவாங்கூருக்கும் இடையிலுள்ள கடுக்கரைமலைக்கு மேற்கே ஆறுமைல் தூரத்திலுளது. இந்நாட்டைப் பூழி நாடென்று குறிக்கின்ற சாஸனங்களுமுளபோலும். சில வருஷங்களுக்குமுன் அவற்றைப் படித்த ஞாபகம் எனக்குண்டு. அவை எவையென்பது இப்போது ஞாபகமில்லை. இஃது இன்னும் ஆராயத்தக்கது." என்னும் திருவாளர் த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் கூற்றால் அது பொருந்தாமை பெறப்படலானும், 'தென்பாண்டி' என்பது பாண்டிநாட்டைக் குறித்ததெனின், அது பாண்டிநாட்டின் ஒரு கூற்றையேயன்றி

மற்றொரு கூற்றைக் குறியாமையானும் அது பொருந்தா தென்பது.

இனி, நச்சினார்க்கினியர்:

> "செந்தமிழ்சேர்ந்த பன்னிரு நிலத்துந்
> தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி" (தொல்-சொல்-எச்ச.)

என்னுஞ் சூத்திரவுரையில் முன்பு கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டுங் கூறி முடித்துப் பின்பு, 'பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டாவன:—சிங்களமும் பழந்தீவுங் கொல்லமுங் கூபமுங் கொங்கணமுந் துளுவுங் குடகமுங் கருநடமும் கூடமும் வடுகுந் தெலுங்குங் கலிங்கமுமாம்' எனக் கூறினர். முற்கூறிய தொல்காப்பியச் சூத்திரத்திற்கு, செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டினும் தாங் குறித்த பொருள் விளக்கும் திசைச்சொல்' என்பதே கருத்தாயிருப்பவும், சேனாவரையரு மங்ஙனமே கூறியிருப்பவும், நச்சினார்க்கினியர் பன்னிரண்டையுஞ் சூழ்ந்த பன்னிரண்டு நிலமாவன இவை என விசேடமாகக் கூறியது அவர் உரைசெய்த காலத்துப் பிறநாட்டு மொழிகளும் செந்தமிழில் வந்து வழங்கியமைபற்றிப்போலும். நன்னூலுரையகத்துத் தமிழ்நிலத்தைச் சேர்ந்த நிலம் பதினேழென்றும், அவை சிங்களம், சோனகம். சாவகம், சீனம், துளு, குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், குசலம் என்பன என்றுங் கூறப்பட்டிருக்கின்றது. திருவிளையாடற் புராணத்துக், 'கண்ணுதற் பெருங்கடவுளும்' என்னுஞ் செய்யுளுரையில், தமிழ் ஒழிந்த பதினேழு நிலமாவன:— அங்கம், அருணம், கலிங்கம், கவுசிகம், காம்போசம்,

கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், துளுவம், பப்பரம், மகதம், மாராடம், வங்கம் என்பன எனக் கூறப்பட்டிருக்கின்றது.

## ௬. தமிழின் சிறப்பு

இனி, தமிழ்மொழி ஆதியிலே இறைவன்பாற், றோன்றியதோர் தெய்வமொழியாம். அது, மற்றைப் பாஷைக்கு மில்லாததும், இயல்பாக மொழியோடியைந்து தோன்றுவதுமாகிய இன்பமான மெல்லோசையும், இயல் வரம்புமுடையது. வடமொழிக்கில்லாப் பொருணூலு டையது. இறையனாரும், முருகவேளும், அகத்தியனு ரும் முதலிய சங்கப் புலவர்களாலாராயப்பட்டது. வழு தியர்கோன் மனக்கவற்சி கண்ட இறையனாலியற்றப் பட்ட களவியலென்னும் பொருணூலுடையது. சோம சுந்தரப் பெருமான், தருமிக்காகவியற்றிய,

"கொங்குதேர்வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி
காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவுமுளவோ நீயறியும் பூவே"

என்னுஞ் செய்யுளையும், பாணபத்திரருக்காக வியற்றிய,

"மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்

செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
றன்போ லென்பா லன்பன் றன்பாற்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே''

என்னுஞ் செய்யுளையுங் கொண்டுள்ளது. பரமசிவனாற், 'பாவை பாடியவாயாற் கோவை பாடுக'' என மணிவாசக பெருமானிடத்துப் பணிக்கப்பெற்ற திருக்கோவையாரைப் பெற்றுள்ளது. செஞ்சடைப் பெருமான் திருச்செவிசாத்தியருளி நூறுதரந் தந்திருமுடியசைத்த கல்லாடமென்னு நூலைப் பெற்றுள்ளது. கண்ணுதற் கடவுளால் ''உலகெலாமுணர்ந்தோதற் கரியவன்'' எனப் பெரியபுராணம் பாடும்படி சேக்கிழார் நாயனாருக் கடியெடுத்துக் கொடுக்கப்பட்டது. முருகப்பிரானால் ''திகட சக்கரச் செம்முக மைந்துளான்'' எனக் கந்தபுராணம் பாடுதற்குக் கச்சியப்ப சிவாசிரியர்க்கு அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றுள்ளது.

இனி,

''ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேதமுடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.''

''ஆரிய நன்று தமிழ்த்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட்பாட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா''

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்"

"இருமொழிக்குங் கண்ணுதலார் முதற் குரவரியல்வாய்ப்ப
விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பு
மிருமொழியு மான்றவரே தழீஇயினா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ"

"கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாராய்ந்தவிப் பசுந்தமிழேனை
மண்ணிடைச் சிலவிலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும்படுமோ"

'தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை யழைத்ததுமெலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்னுஞ் செய்யுள்கள் அத்தமிழின் பெருமையை விளக்குகின்றன. கொற்றவன் குடி உமாபதி சிவாசிரியர்தமிழிலன்றி ஆரியத்திலும் பெரும் பாண்டித்திய முடையவராயிருப்பவும், அவர்க்குப் புலியூர்ப் புனிதர் எழுதிய ஆவணம்,

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை

எனத் தமிழ்ச் செய்யுள் வடிவாயிருப்பின், இன்னும் அத்தமிழைப்பற்றிக் கூறவேண்டுமோ என்பது.

## எ. தமிழின் வளர்ச்சி

இனி, உலகின்கணுள்ள மக்கள் பலராலும் பேசப் பட்டுப் பலவிடங்களிலுக் தமிழ்மொழி பரந்திருத்தலும் பழையனவும் புதியனவுமாகிய தமிழ்மொழித் திரளாற் செய்யுணடையாகவும், உரை நடையாகவும் புதிது புதிதாகப் பல நூல்கள் இயற்றப்படுதலும், தமிழ்மொழி வளர்ச்சியெனக் கூறப்படும். அத்தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருஞ்சாதனமாயிருப்பன கல்விக் கழகங்களும் சங்கங்களுமாம். முற்காலத்துப் பாண்டிநாட்டகத்துத் தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கமென மூன்று சங்கங்களிருந்தன. அச்சங்கங்களிலிருந்து புலவர்கள் தமிழையாராய்ந்தனர். அதனாற் றமிழ்மொழி வளர்ந்து மிக மேம்பாடுற்றது. தமிழ்மொழி பெரிதுஞ் சிறப்புற்று விளங்கிய காலஞ் சங்க காலமாகும். சங்ககாலத்தின்முன் தமிழ்மொழி எவ்வாறிருந்ததென அறிந்துகோடற்குத் தக்க ஆதாரம் யாதுமின்று. ஆயினும், சிவபெருமான் அகத்திய முனிவரைத் தென்னாட்டிற்குப் போகும்படி கூறியபொழுது, அவர் "அடியேன் போகுந்தேசம் தமிழ் நாடாதலாலும், அங்குள்ளவர்களெல்லாந் தமிழின் மிக வல்லவர்களாதலாலும், கேட்டவர்களுக்கு உத்தரஞ் சொல்லவேண்டுமாதலாலும், அடியேனுக்குத் தமிழிலக்கண நூலை அருளிச்செய்யும்" எனச் சிவபெருமானைக் கேட்டாரெனத் திருவிளையாடற் புராணத்துக் கீரனுக்கிலக்கண முபதேசித்த படலத்துக் கூறப்பட்டிருப்பதால், அதுகொண்டு சங்ககாலத்தின் முன்புந் தமிழ்மொழி மிக மேம்பாடுற்றிருந்ததென வறியக் கிடக்கின்றது.

இனி, தமிழ்நாட்டு முச்சங்கங்களைப் பற்றிய வரலாற்றை விரிவாக முதன்முதலுணர்த்தும் நூல் இறையனு

ரகப்பொருளுரையாகும். அவ்விறையனு ரகப்பொருளுரை யில். "தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூவகைப்பட்ட சங்கமிரீஇயினர் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும், முரஞ்சியூர் முடிநாக ராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்றுநாற்பத் தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களாற் பாடப்பட் டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முது குருகும், களரியாவிரையுமென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் காய்சினவழுதி முதலா கக்கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்பரென்ப. அவருட் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியரென்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூலகத்தியம்" எனத் தலைச்சங்க வரலாறும், "இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசி யும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோனும், கீரந்தையுமென இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்பரென்ப. அவருள் ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினரென்ப. அவர் களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலையகவலுமென இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமும் என இவை யென்ப. அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்கமி

ருந்தாரென்ப. அவரைச் சங்கமிரீஇயினர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீருக ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினர் ஐவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டியநாட்டைக் கடல்கொண்டது” என இடைச்சங்க வரலாறும், “இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியரும், சேந்தம் பூதனரும், அறிவுடையானரும், பெருங்குன்றூர் கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனரும், மருதனிளநாகனரும், கணக்காயனர் மகனர் நக்கீரனருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையுமென்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமுமென்ப. அவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீருக நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருட் கவியரங்கேறினர் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப” எனக் கடைச்சங்க வரலாறுங் கூறப்பட்டுள்ளன. காய்சினவழுதியென்னும் பாண்டியனல் தென்மதுரையகத்துத் தலைச்சங்கம் நிறுவப்பட்டது. அது கடுங்கோன் என்

னும் பாண்டியன் அரசுசெய்த காலத்து நிகழ்ந்த கடல் கோளினல் அழிவெய்திற்று. வான்மீகி முனிவர், இராமாயண காலத்திலே பாண்டியர்களுடைய தலைநகர் பொருநையாறு கடலொடு கலக்கின்ற இடத்திற்கருகிலிருந்ததென்று குறித்தலானும், அக்காரணம் பற்றித் தற்கால ஆராய்ச்சிகாரர் அதனை அலைவாயென்று கருதுதலானும் அக்கடல்கோளின்பின் பாண்டியர்களுக்குத் தலைநகராயிருந்தது அலைவாயென அறியப்படுகின்றது. பாண்டியர்கள் சிலகாலஞ் சென்றபின் அலைவாயை விட்டுக் கபாடபுரத்தைத் தமக்குத் தலைநகராக்கிக்கொண்டனர். அக்காலத்து வெண்டேர்ச் செழியன் என்னும் பாண்டியனுல் கபாடபுரத்தில் இடைச்சங்கம் நிறுவப்பட்டது. அவ்விடைச்சங்கம் முடத்திருமாறன் என்னும் பாண்டியன் அரசுசெய்த காலத்து நிகழ்ந்த கடல் கோளால் அழிவெய்தியது. வியாசபாரதத்து அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தாலும், திருவிளையாடற் புராணத்துத் திருநகரங் கண்ட படலத்தாலும் மணவூர் பாண்டியர்களுக்குத் தலைநகராயிருந்ததெனப் புலப்படுதலின், அக்கடல்கோளின்பின் பாண்டியர்கள் மணவூரைத் தமக்குத் தலைநகராக்கிக்கொண்டனரென வறியப்படுகின்றது. சிலகாலஞ் சென்றபின், பாண்டியர்கள் அம் மணவூரைவிட்டு உத்தர மதுரையைத் தமக்குத் தலைநகராக்கிக்கொண்டனர். அவ்வுத்தர மதுரையில் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறனுல் கடைச்சங்கம் நிறுவப்பட்டது. அக்கடைச்சங்கம் உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டியன் அரசுசெய்த காலத்து நிகழ்ந்தவற்கடத்தால் அழிவெய்தியது. தலைச்சங்க காலத்தும் இடைச்சங்க காலத்தும் இருந்த நூலொன்றும் இஞ்ஞான்று நமக்குக் கிடைக்கப் பெருமையின் இறையனா

சப்பொருட் பாயிரத்து அச்சங்கங்களின் வரலாருகக் கூறப்பட்டனமாத்திரமேயன்றி, வேறு யாதும் அவற் றைப்பற்றி அறிந்துகொள்ள முடியவில்லை. கடைச்சங்க வரலாற்றைப்பற்றி அறிந்துகோடற்கு அக்காலத்திற் ரேன்றிய புறநானூறு முதலிய சில நூல்களுளவேனும் அவற்றைக்கொண்டு அச்சங்க வரலாறு முழுமையும் தெளிவாக அறிந்துகோடல் இயலாதென்பது.

இனி, முச்சங்கமிருந்த காலத்தைப்பற்றியும், கடைச் சங்கமழிவெய்திய காலத்தைப்பற்றியும் அறிஞர் பலரும் பலவாருகக் கூறுவர். வான்மீகிராமாயணம், திருவிளை யாடற்புராணம் முதலிய நூல்களைக்கொண்டும், தேவா சுர யுத்தம், இராம ராவண யுத்தம், பாரதயுத்தம் முதலிய நிகழ்ச்சிகளைக்கொண்டும் ஆராய்ச்சி செய்யுங் காலத்து, அவ்வாராய்ச்சி முடிபும் பலதிறப்பட முடிகின்றது. ஆத லால், அவற்றுட் சிறந்ததோர் கொள்கையைத் தெள்ளி திற் றுணியுமாறு சிறிது ஆராய்குதும். திருவாளர் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள், தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புரையகத்து, "பராக்கிரம பாண்டி யனை வென்று துலுக்கர் முதன்முதல் மதுரையாண்டு எண் ணூற்றைம்பது வருடத்தின்மேலாயிற்று. சங்கத்தார்காலத் திற்கும் பராக்கிரமபாண்டியன் காலத்திற்கும் இடையிலே சோமசுந்தர பாண்டியன் முதலாக நாற்பத்திரண்டு அனு லோம பாண்டியர் அரசுசெய்திருக்கின்றனர். ஆதலால் கடைச்சங்கம் ஒழிந்தகாலம் இரண்டாயிரம் வருஷத்திற் குறையாது. முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவ ழுதியீருகக் கடைச்சங்கம் இரீஇய நாற்பத்தொன்பதின் மர் பாண்டியர் அரசுபுரிந்த காலம் இரண்டாயிரம் வரு ஷமும் வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறனீ

ருக இடைச்சங்கமிரீஇய ஐம்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்தகாலம் மூவாயிரத்தைஞ்ஞூறு வருஷமும், காய்சினவழுதி முதற் கடுங்கோன் வழுதியீருக முதற் சங்கமிரீஇய எண்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்தகாலம் நாலாயிரத்தைஞ்ஞூறு வருஷமுமாம்'' எனக்கூறுவார்கள். பறங்கிப்பேட்டை, திருவாளர். கோ. இராமசாமிப்பிள்ளையவர்கள், தலைச்சங்கம் சுமார் கி. மு. 2387-ம் ஆண்டில் நிகழ்ந்த கடல்கோளால் அழிந்ததென்றும், இடைச்சங்கம் கி. மு. 13-ம் நூற்றூண்டில் அரசுபுரிந்திருந்த முடத்திருமாறன் காலத்து நிகழ்ந்த கடல்கோளால் அழிந்ததென்றும், கடைச்சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றூண்டின் இடைப்பகுதியில் உக்கிரப்பெருவழுதியரசன்காலத்தில் நிகழ்ந்த பஞ்சத்தால் அழிந்ததென்றுங் கூறுவார்கள். திருவாளர். T. S. பாலசுந்தரம்பிள்ளையென்னும் இளவழகனூரவர்கள், செந்தமிழ்ச்செல்வி 8ம் சிலம்பு, 1ம் பரலில், ''புறநானூறும்பழந்தமிழ்நாடும்'' என்னுங் கட்டுரையில், முச்சங்கமும் நிகழ்ந்த மொத்தகாலம் கி. மு. முப்பத்தொன்பதாம் நூற்றூண்டின் நடுவுதுவங்கிக் கி. பி. இரண்டாம் நூற்றூண்டின் நடுவுகாறுஞ்சென்றநாலாயிரம் ஆண்டுகளாகுமென்றும், அதன்பின் ஒரு முந்நூறூண்டுகள் புத்தகாலமாகவும், அதற்கடுத்த முந்நூறுஆண்டுகள் சமணகாலமாகவும், பின் அறுநூறுஆண்டுகள் சைவவைணவ காலமாகவும், நானூறு ஆண்டுகள் பார்ப்பன காலமாகவும், கடைசி இருநூறு ஆண்டுகள் ஆங்கிலகாலமாகவும் காலம் மாறிவிட்டதென்றுங் கூறுவார்கள். தஞ்சை திருவாளர் K. S. சீனிவாசபிள்ளையவர்கள், தமிழ் வரலாற்றில், இனிதமிழாசிரியர் பலர் மூன்று தமிழ்ச்சங்கங்கள் இருந்தன என்பர். முதற்சங்கம் 4440 யாண்டும், இடைச்சங்கம் 3700 யாண்டும், கடைச் சங்கம் 1850

யாண்டும், நடைபெற்றன வென்பது அவர் கொள்கை. சங்கம் இறுதிபெற்றதைச் சரித்திர ஆராய்ச்சிகாரர் இற்றைக்குச் சுமார் 1700 யாண்டுகளுக்கு முன் என்பர். சங்கங்களுக்கு இடையிட்ட யாண்டு இத்துணை என்பது அறியக்கூடவில்லை. இவர் கொள்கைப்படி தமிழ்ச்சங்கந் தொடங்கியது இற்றைக்குப் பன்னீராயிரம் யாண்டுகளுக்கு முன்னர் என்பது தவறாகாது" எனக்கூறுவார்கள். இனி, இந்திரன் பிரமதேவரிடஞ்சென்று விருத்திரனை வெல்லும் வழியாதென்று கேட்க, அப்பிரமதேவர் அகத்தியமுனிவரிடம் அவனைக் குறையிரக்கும்படி கட்டளையிட்டாரென்றும், அங்ஙனமே சென்று அகத்தியமுனிவரை வேண்டிக்கொள்ள, அவர் கடலையுண்டு விருத்திரனைக் காட்டினரென்னும் இந்திரன் குறையிரந்தது பொதியமலையிலென்றும், இது நிகழ்ந்த காலம் கிரேதா யுகமென்றும், திருவிளையாடற் புராணத்து இந்திரன் பழிதீர்த்த படலத்துக் கூறப்பட்டிருத்தலானும், அகத்தியமுனிவர் பொதியமலையிற் சென்றிருந்தது தேவாசுரயுத்தம் நிகழ்வதற்குமுன் எனக் கந்தபுராணத்தா லறியப்படலானும், இறையனாரகப்பொருள் முப்பத்தைந்தாஞ் சூத்திரவுரையிலுள்ள, "அல்லதூஉந் தேவரும் அசுரரும் பொருதகாலத்துத் தேவரையும் அசுரரையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரையொறுப்பல் யான் எனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்தது போல் இருவரின் மிகைசெய்தீரை ஒறுப்பலென்று சந்து செய்வித்தலுமொன்று" என்னும் வாக்கியத்தால் தேவாசுர யுத்தம் நிகழ்ந்த காலத்துப் பாண்டியன் மாகீர்த்தி என்பான் இருந்தானெனன வறியப்படுதலானும் சிலப்பதிகாரத்து வேனிற்காதையுரையிலுள்ள "தலைச்சங்கத்துக் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமா

கீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்துஇரீஇயினான்" என்னும் வாக்கியத்தால் பாண்டியன் மாகீர்த்தி தலைச்சங்க காலத்தில் இருந்தானென வறியப்படலானும், தொல்காப்பியர் பரசுராமருடைய சகோதரரென்றும், அவர் தலைச்சங்கத் திறுதிக் காலத் திருந்தாரென்றும், கற்றுவல்ல சான்றோர் கருதுதலானும், பரசுராமருடையதாய் இரேணுகையாமாகலானும், பரசுராமருக்குத் தொல்காப்பியர் சகோதரர் என முன்னர்க் கூறப்பட்டமையின் பரசுராமருடைய தாயாகிய இரேணுகையே தொல்காப்பியருடைய தாயென வுய்த்துணரப்படுமாகலானும்,

"என்னே கிரேதத் திரேணுகையே கூற்றாகுந்
தன்னேர் திரேதத்திற் சானகியே—பின்யுகத்திற்
கூடுந் திரௌபதியே கூற்றாங் கலியுகத்தில்
வீடுதொறுங் கூற்றுவனாமே"

என்னும் நீதிவெண்பாச் செய்யுளால் இரேணுகை கிரேதா யுகத்திலிருந்தாளென வறியப்படுதலானும் தலைச்சங்கம் கிரேதாயுகத்திலிருந்ததெனக் கருதப்படும். கிரேதா யுகத்தில் 1728000 யாண்டுகளும், திரேதாயுகத்தில் 1296000 யாண்டுகளும், துவாபர யுகத்தில் 864000 யாண்டுகளும், கலியுகத்தில் 432000 யாண்டுகளும் உளவாகலானும், இப்பொழுது நிகழ்வது கலியுகமாதலானும், இச்கலியுகத்திற் சென்ற சுக்கில வருஷத்துடன் 5301 யாண்டுகளும் கழிந்தனவாமாகலானும் தலைச்சங்கம் இருந்தது இற்றைக்குச் சுமார் 2165301 யாண்டுகளுக்கு முன்னெனக் கருத வேண்டியிருக்கின்றது. வான்மீகி ராமாயணத்திற் கிஷ்கிந்தா காண்டத்து நாற்பத்தோராஞ் சர்க்கத்திலுள்ள பத்தொன்பதாஞ் சுலோகத்தில் (இராமர்பொருட்டுச் சென்ற) வானரங்கள் பாண்டியர்களுடைய கபாடபுரத்தை யடைந்

தனவெனக் கூறப்பட்டிருப்பதாலும், இடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவிடம் கபாடபுரமெனவும், இடைச்சங்க விறுதிக்காலத்து நிகழ்ந்த கடல்கோளால் பாண்டிநாடு அழிவெய்தியதெனவும் களவியலுரையால் அறியப்படுத லாலும், அழிவெய்திய பாண்டி நாட்டின் பகுதியிற் கபாட புரமு மடங்கியுளதா மாதலாலும், முற்கூறிய "என்னே கிரேதத்து" என்னும் நீதிவெண்பாச் செய்யுளால் சீதை திரேதாயுகத்திலிருந்தாளென்றும், சீதைகாரணமாகவுண் டான இராம ராவண யுத்தம் திரேதா யுகத்தில் நிகழ்ந்த தென்றும் அறியப்படுதலாலும், சீதையை இராவணன் கவர்ந்து இலங்கையில் அசோக வனத்தில் வைத்திருந்த பொழுது இராமர்பொருட்டுச் சென்ற குரங்குகள் சீதை யைத் தேடிச் சென்று வழியிற் காணப்பட்ட கபாட புரத்திற் போய்த் தங்கிய செய்தியே முற்கூறிய வான் மீகி ராமாயணச் சுலோகத்திற் கூறிய செய்தியாமாதலா லும் இடைச்சங்கமிருந்தது திரேதாயுகத்திலெனக் கருத வேண்டியிருக்கிறது. புறநானூற்றிற் காணப்படும் "மண் டிணிந்த நிலனும்" என்னுஞ் செய்யுளிலுள்ள,

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந்தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாதுகொடுத்தோய்'

என்னுமடிகளால் ஐவர்க்கும் நூற்றுவர்க்கும் இடையே நிகழ்ந்த பாரதப் போரில் அவ்விருதிறத்தார் படைகட்கும் 'பெருஞ்சோற்றுதியஞ் சேரலாத' னென்னுமரசன் பெருஞ் சோறு வழங்கினனென வறியப்படலானும், உதியஞ் சேரல் பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை" என்னும் மா மூலர் வாக்கும்,

"ஓரைவரீரைம் பதின்மருடன் றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ வூசல்"

என்னும் இளங்கோவடிகள் வாக்கும் அதற்குச் சான்று பகருதலானும், "மண்டிணிந்த நிலனும்" என்னுஞ் செய்யுளைப் பாடிய புலவர் முரஞ்சியூர் முடிநாகராயராமாகலானும், அவர் தலைச்சங்கப் புலவரெனக் களவியலுரையாற் பெறப்படுதலானும், முற்கூறிய "என்னே கிரேதத்து" என்னும் நீதிவெண்பாச் செய்யுளாற் றிரௌபதி துவாபர யுகத்திருந்தாளென வுணரப்படுதலானும் தலைச்சங்கமிருந்தது துவாபர யுகத்திலெனக் கருதவேண்டியிருக்கிறது. திருவிளையாடற் புராணத்துத் திருவாலவாயான படலத்தில் கீர்த்திவிபூடண பாண்டியன் அரசுசெய்த காலத்தில் பிரளயகாலம் வந்ததென்றும், அப்பிரளயகாலம் நீங்கியபின்பு சிவபெருமான் சந்திரன் சூரியன் அக்கினி என்னும் மூவருடைய குலத்தினின்றும் தமிழ் வேந்தர் மூவரையும் படைத்தாரென்றும், அப்பொழுது சந்திர குலத்துதித்த வம்மிசசேகர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோவிலைச் சூழ ஒரு சிறு நகரம் நிருமித்து அதிலிருந்துகொண்டு அரசுசெய்தானென்றுங் கூறியிருப்பதாலும், அவன் அரசாண்ட பின்பு செங்கோலோச்சியவன் வமிச சூடாமணி அல்லது வங்கிய சூடாமணி என்னும் சண்பகமாறனு மாதலாலும், சிவபெருமான் செய்த செய்யுளுக்கு நக்கீரர் குற்றங் கூறியது சண்பக மாறன் காலத்திலேயே என்பது வெளிப்படையாமாதலாலும், நக்கீரர் கடைச்சங்கப் புலவராமாதலாலும், கீர்த்திவிபூடண பாண்டியன் காலத்து வந்த பிரளயம் துவாபர யுகத்தின் முடிவுகாலத்து வந்த பிரளயமென ஊகித்தறியப்

படுதலாலும் கடைச்சங்கந் தொடங்கிய காலம் கலியுகந் தொடங்கிய காலமாகுமெனஎண்ணவேண்டியிருக்கிறது.

இதுகாறும் அறிஞர்கள் பலரும், முச்சங்கமிருந்த காலத்தைப்பற்றியும், கடைச்சங்க மழிவெய்திய காலத்தைப்பற்றியும் கருதும் கருத்து வேறுபாட்டையும், பல திறப்பட்ட ஆராய்ச்சி முடிவின் வேறுபாட்டையும் கூறினும். இனி அவை பொருந்துமாறின்மையையும் நம்முள்ளக் கிடக்கையையும் வெளியிடுகின்றும். திருவிளையாடற் புராணத்தாற் பாண்டிநாட்டை யரசாண்ட வேந்தர்களுட் குலசேகரபாண்டியன் முதற் கூன் பாண்டியனீறுகவுள்ள எழுபத்துமூன்று பாண்டியர்களுடைய பெயராறியப்படுதலானும், அதிற் பராக்கிரமவாகு பாண்டியனெனப் பெயரிய ஒரு பாண்டியன் அரசாண்டானெனக் கூறப்பட்டிருக்கின்றதேயன்றி, பராக்கிரமபாண்டியன் எனப் பெயரிய ஒரு பாண்டியன் அரசாண்டானெனக் கூறப்படாமையானும், பராக்கிரமவாகு பாண்டியனே ஈண்டுக் குறிக்கப்பட்ட பராக்கிரம பாண்டியனு மெனினும், சோமசுந்தர பாண்டியன் முதலாகப் பராக்கிரமவாகு பாண்டியன் வரையும் அரசாண்ட பாண்டியர்களுடைய தொகை அறுபத்துமூன்றென வறியப்படுகின்றதேயன்றி, நாற்பத்திரண்டென வறியப்படாமையானும், ஆதலால் அவ்வித வாராய்ச்சி கொண்டு கடைச்சங்க மொழிந்த காலம் இரண்டாயிரம் வருடத்திற் குறையாதென்றுகூறல் பொருந்தாமையானும், இறையனு ரகப்பொருளுரையைக்கொண்டு முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி யீறுகக் கடைச்சங்கமிரீஇய நாற்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்த காலம் ஆயிரத்தெண்ணூற்றைம்பது வருடமென்றும், வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாற னீறுக

இடைச்சங்கமிரீஇய ஐம்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்த காலம் மூவாயிரத்தெழுநூறு வருடமென்றும், காய்சினவழுதிமுதற் கடுங்கோனீருகத் தலைச்சங்கமிரீஇய எண்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசுபுரிந்த காலம் நாலாயிரத்து நானூற்று நாற்பது வருடமென்றும் உய்த்துணரப்படுதலானும், திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கூற்றுப் பொருந்தாமை யுணரப்படும். பண்டைத்தமிழ்நூல்களைக் கொண்டு ஆராய்ச்சிசெய்யுங் காலத்துத் தலைச்சங்கம் சுமார் கி. மு. 52-ம் நூற்றாண்டின் நடுவில் அரசுபுரிந்த கடுங்கோன் பாண்டியன் காலத்து நிகழ்ந்த கடல்கோளால் அழிவெய்தியதென்றும், இடைச்சங்கம் சுமார் கி. மு. 15-ம் நூற்றாண்டின் நடுவில் அரசுபுரிந்த முடத்திருமாறன் காலத்து நிகழ்ந்த கடல்கோளால் அழிவெய்தியதென்றும், கடைச்சங்கம் சுமார் கி. பி. 2-ம் நூற்றாண்டின் நடுவில் அரசுபுரிந்த உக்கிரப்பெருவழுதி காலத்து நிகழ்ந்த பஞ்சத்தா லழிவெய்தியதென்றும், அறியப்படுதலானும், அங்ஙனங் கூறுதற் கோராதாரமு மின்மையானும், திருவாளர் கோ. இராமசாமிப்பிள்ளையவர்கள் கூற்றுப் பொருந்தாமை யுணரப்படும். களவிய லுரையகத்து நக்கீரர் தலைச்சங்கமொன்றே நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இருந்ததெனக் கூறியிருப்பவும், அதனை அடியார்க்கு நல்லாருமொப்புக்கொண்டிருப்பவும் முச்சங்கமுமிருந்த மொத்த காலம் 4000 வருடமெனக் கூறுதல் சிறிதேனும் பொருத்தமின்றுமாகலானும், அவ்வாறு கூறுதற்குத் தகுந்த ஆதாரமாக யாதோர் பிரமாணமுங் கூறுமையானும் திருவாளர் இளவழகனு ரவர்கள் கூற்றுப் பொருந்தாமை தெருளப்படும்,

இனி, தலைச்சங்கம் கிரேதாயுகத்திலிருந்ததென்றும், இடைச்சங்கம் திரேதாயுகத்திலிருந்ததென்றும் துணிதற்குரிய ஆராய்ச்சி முறையும், அவ்வாராய்ச்சிக் கேற்ற ஆதாரங்களும், மிகவுமமைவுடையனவாகக் காணப் படினும், ஆராய்ச்சிகாரரும் பிறருமாகிய அறிஞர்களுள் ஒருவரேனும் அங்ஙனம் அபிப்பிராயப்படாமையின் அவ் வாறு கோடல் சாலாது. இடைச்சங்கம் அழிவெய்திய காலத் தரசாண்ட முடத்திருமாறனே கடைச்சங்கந் தொடங்கிய காலத்து மரசாண்டானெனக் களவியலுரை யால் அறியப்படுதலானும், திருவிளையாடற் புராணத் தில் இவ்வரசன்பின் இவ்வரசனரசாண்டான். இவ்வர சன்பின் இவ்வரசனரசாண்டான் எனக் கூறப்படுஞ் சந் ததி முறையெல்லாம் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பொருத் தமின்றிக் காணப்படுதலானும், கடைச்சங்கந் தொடங்கி யது சுமார் கி. மு. 15-ம் நூற்றாண்டேயன்றிக் கலியுகத் தின் ஆரம்பகாலமாகிய கி. மு. 32-ம் நூற்றாண்டன்று மாகலானும் கலியுகத்தின் தொடக்கத்திலேயே கடைச் சங்கந் தொடங்கப்பட்டதென்றல் ஒவ்வாது.

இனி, திருவிளையாடற் புராணம் முதலிய சில நூல் கள் தமிழ்நாட்டுச் செய்தியையே கூறுவனவாயினும், அவை ஆலாசிய மான்மியம் முதலிய ஆரிய நூல்களிலி ருந்து மொழிபெயர்க்கப்பட்டனவாதலின், தமிழ்நாட் டுச் செய்தியை நேரே கூறுந் தமிழ் நூல்கள் போலப் பொய்மை சிறிதுங் கலவாது மெய்ம்மையே யுரைக்கும் நீர் மையவல்ல. திருவிளையாடற் புராணம் எழுந்ததன் கருத்து ஆலவாயின் பெருமையைத் தெரிவிக்கவேண்டுமென்ப தேயன்றி, மதுரை மாநகரில் வீற்றிருந்தரசு புரிந்த பாண் டியர்களின் முறையையும், அவர் செங்கோலோச்சிய

காலத்தினெல்லையையும் மெய்ம்மையாகத் தெரிவிக்கவேண்டுமென்பதன்று. தமிழ்நாட்டாகிய பாண்டி நாட்டின்கணிருந்த முச்சங்க வரலாற்றை நேரே கூறுந் தமிழ் நூலாகிய களவியலுரையில் தலைச்சங்கம் 4440 வருடமும், இடைச்சங்கம் 3700 வருடமும், கடைச்சங்கம் 1850 வருடமும் இருந்தனவெனக் கூறப்பட்டிருக்கின்றது. உக்கிரவருமன் என்னும் பாண்டியன் அரசுபுரிந்த காலத்து இருமுறை பஞ்சம் வந்ததென்றும், தமிழ்வேந்தர் அகத்திய முனிவரையடைந்து மழை வறந்தமையைச் சொன்னபொழுது அவர் கிரகநிலையை நோக்கிப் பன்னிரண்டு வருடம் மழை பெய்யாதெனக் கூறினரெனச் சொல்லப்படுதலின் முதன்முறை வந்த பஞ்சம் பன்னீரியாண்டு நிலைபெற்றதென்றும் திருவிளையாடற் புராணத்தா லறியப்படுதலானும், உக்கிரப்பெருவழுதி யரசு புரிந்த காலத்துப் பாண்டிநாடு பன்னீரியாண்டு வற்கடஞ் சென்றதென்றும், அப்பொழுது அரசன் புலவர்களை யழைத்து இஞ்ஞான்று நந்நாடு மழைவளங் குன்றிப் பஞ்சம் எய்திற்றாகலின் நீவிர் பிறநாடு புக்கு நாடு நாடாயின ஞான்று எம்மையுள்ளி வம்மினெனக் கூறினனென்றும், பின்பு அவர்கள் அங்ஙனம் புக்குப் பெயர்ந்துவந்து சங்கத்திருந்து தமிழையாராய்ந்தனரென்றும், களவியலுரையாற் பெறப்படுதலானும், கடைச்சங்கம் உக்கிரப் பெருவழுதி காலத்து நிகழ்ந்த பஞ்சத்தால் அழிவெய்தியதென ஆராய்ச்சிவல்ல சான்றோர் கூறுதலானும், ஈரிடத்துங் காணப்படும் பெயரு மொத்திருத்தலானும் உக்கிரவருமனே உக்கிரப்பெருவழுதியெனத் துணியப்படும். திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், 'நக்கீரர்' என்னும் நூலில் நக்கீரர் காலத்திருந்த அரசர்கள், தலையாலங்கானத்துச் செரு

வென்ற நெடுஞ்செழியன், உக்கிரப்பெருவழுதி, இலவந் திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, யானைக்கட்சேய்மாந்தாஞ் சேரலிரும்பொறை, சேரமான்மாவெண்கோ, குட்டுவன் சேரல் முதலியோரென்றும், நக்கீரர் இளைஞராயிருந்த காலத்தும் சிறிது முற்பட்ட காலத்துமிருந்தவர்கள் கபிலர், பாணர், சாத்தனார் முதலிய புலவர்களும், ஆரியப்படை தந்த நெடுஞ் செழியன், கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, செங்குட்டுவன், செல்வக்கடுங்கோவாழியாதன் முதலிய அரசர்களும், பாரி, பேகன் முதலிய வேளிர்குல வள்ளல் களுமாமென்றும் கூறுதலால் ஆரியப்படை தந்த நெடுஞ் செழியன் என்னும் பாண்டியனும், செங்குட்டுவன் என்னும் சோனும், உக்கிரப்பெருவழுதிக்கு முற்பட்டவர்களெனத் தெரிகின்றது. பிரம ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் சிலப்பதிகாரப் புஸ்தகத்திலே, இளங்கோவடிகள் வரலாற்றிலே, "இளங்கோவடிகளுக்குத் தமையனாகிய செங்குட்டுவன் பத்தினிக் கடவுளாகிய கண்ணகியார்க்குக் கோயில் சமைத்து விழாக்கொண்டாடிய காலத்து இலங்கையாசனாகிய கயவாகுவென்பவன் உடனிருந்தானென்று வரந்தரு காதையாலும், அக்கயவாகுவும் இலங்கையிற் கண்ணகியார்க்குக் கோயில்கட்டுவித்து விழாக்கொண்டாடினனென்று இந்நூற் பதிகத்தைச் சார்ந்த உரைபெறு கட்டுரையாலும் தெரிகின்றன. இற்றைக்குச் சற்றேறக்குறைய 1800 வருடங்கட்குமுன்பு கயவாகுவென்னும் அரசனொருவன் இருந்தானென்று இலங்கைச் சரித்திரமாகிய மகாவம்சத்தாற் புலப்படுகின்றது. பின்னும் சற்றேறக்குறைய 800 வருடங்களுக்குமுன் கயவாகு வென்னும் மற்றோரரசன் இருந்ததாகவும் அச்சரித்திரத்தால் தெரியவருகிறது. ஆயி

னும், இந்நூலிற்கூறிய வேறு சில அரசர்களுடைய காலத்தை ஆராயும்போது இந்நூலாசிரியருடைய காலம் முதற் கயவாகுவின் காலமென்றே துணியப்படுகின்றது'' எனக் கூறுதலின் முதற் கயவாகுவின் காலத்தவனாகிய செங்குட்டுவனும், அவன் காலத்தவனாகிய ஆரியப்படை தந்த நெடுஞ்செழியனும் இற்றைக்குச் சுமார் 1800 வருடங்களுக்கு முன்பு இருந்தார்களென வறியப்படுகின்றது. ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனுக்குப் பின்பு அவன் மகனாகிய வெற்றிவேற் செழியனும், நக்கீரர் காலத்தவனாகிய சண்பகமாறனும், ''செந்தமிழ்நாடே சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்'' என்னுஞ் செய்யுளிற் கூறப்பட்ட உக்கிரவருமனின் பிதாவாகிய சௌந்தரபாண்டியனும் அரசாண்டார்களென்றும், அவர்களின் பின் அரசாண்ட உக்கிரப்பெருவழுதி காலத்து நிகழ்ந்த பஞ்சத்தால் கடைச்சங்க மழிவெய்தியதென்றும் அறியப்படுதலின் சுமார் நூறு வருடங்களை அவர்கள் அரசாண்ட காலமாகக் கருதலாம். ஆகவே, ஆரியப்படை தந்த நெடுஞ்செழியன் காலமாகிய சுமார் 1800 ஆண்டுகளிலிருந்து அவன்பின் அரசாண்டவர்களுடைய காலமாகிய சுமார் 100 ஆண்டுகளைக் கழிக்கவரும் சுமார் 1700 ஆண்டுகளே கடைச்சங்கம் அழிவெய்திய காலமெனத் தெரியப்படும். ஈண்டுக் கூறியவற்றால் தலைச்சங்கம் தொடங்கிய காலம் சுமார் கி. மு. 96-ம் நூற்றாண்டெனவும், தலைச்சங்கம் அழிவெய்திய காலம் சுமார் கி. மு. 52-ம் நூற்றாண்டெனவும். இடைச்சங்கந் தொடங்கிய காலம் சுமார் கி. மு. 52-ம் நூற்றாண்டெனவும். இடைச்சங்க மழிவெய்திய காலம் சுமார் கி. மு. 15-ம் நூற்றாண்டெனவும், கடைச்சங்கந் தொடங்கிய காலம் சுமார் கி. மு. 15-ம் நூற்

ருண்டெனவும், கடைச்சங்க மழிவெய்திய காலம் சுமார் கி. பி. 2-ம் நூற்றுண்டெனவும் புலனுதல் காண்க. பாரத யுத்த நிகழ்ச்சியைக்கொண்டு ஆராய்ந்த ஆராய்ச்சியும் தஞ்சை R. S. சீனிவாச பிள்ளையவர்கள் அபிப்பிராய மும் எங்கூற்றை யொத்திருத்தல் ஈண்டுக் கவனிக்கத் தக் கது. ஆனுல் தஞ்சை R. S. சீனிவாசபிள்ளையவர்கள் தமிழ்ச்சங்கந் தொடங்கியது இற்றைக்கு 1200 யாண்டு களுக்கு முன்னெனக் கருதுகின்றுர்கள். அவர்கள் அங் ஙனம் கருதுவதற்கிருந்த காரணம் சங்கங்களுக்கு இடை யிட்ட காலம் இத்துணையென அறியப்படாமையேயாம். தலைச்சங்கத்திறுதியிலிருந்த வரசன் கடுங்கோனென்றும், இடைச்சங்க ஆரம்பத்திலிருந்த அரசன் வெண்டேர்ச்செழி யன் என்றும் கூறுதலின், கடுங்கோனுக்குப் பின்னா சாண்டவன் வெண்டேர்ச்செழியனே அன்றி வேறெருவனே எனப் புலப்படாமையால் இவ்விருசங்கங்களுக்கு மிடையிட்டகாலம் இத்துணையென வளவிட்டறிதலியலா தாயினும் முடத்திருமாறனெருவனே இடைச்சங்கத்திறு தியிலும், கடைச்சங்க முதலிலும் இருந்தானென வறியப் படுதலால் 310 யாண்டுகளைச் சங்கங்களுக் கிடையிட்ட காலமாகக் கருதல் பொருந்தாது என்பது.

இனி, சிலப்பதிகாரத்துக் காடுகாண் காதையில்,

“திங்கட் செல்வன் றிருக்குலம் விளங்கச்
செங்கணுயிரத் தோன் றிறல் விளங்காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி
முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
றிடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப

மழைபிணித் தாண்ட மன்னன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி''

என வருமடிகளிற் கூறப்பட்ட வரலாறு திருவிளையாடற் புராணத்தில் உக்கிரவருமனுடைய வரலாறாகக் கூறப்பட்டிருக்கின்றது. சிலப்பதிகாரத்தை யியற்றிய இளங்கோவடிகள் மேற்கூறிய வரலாற்றைத் தானியற்றிய நூலகத்துக் கூறியிருத்தலின் இளங்கோவடிகளின் தமையனாகிய செங்குட்டுவன் காலத்தவனாகக் கூறப்பட்ட ஆரியப்படை தந்த நெடுஞ்செழியனுக்கு உக்கிரவருமனெனப்படும் உக்கிரப்பெருவழுதி முற்பட்டவனெனக் கொள்ளவேண்டியிருக்கிறது. அவ்வாறு கோடல் ஆராய்ச்சிக்குப் பெரிதும் பொருத்தமின்றாம். இது ஆராய்ச்சி வல்ல சான்றோராலொருதலையாகக் கவனிக்கத் தக்கது.

## அ. தமிழ் நூற்பகுதி.

இனி, தமிழ்நூல் இயற்றமிழிலக்கணம், இயற்றமிழிலக்கியம், இசைத்தமிழிலக்கணம், இசைத்தமிழிலக்கியம், நாடகத்தமிழிலக்கணம், நாடகத் தமிழிலக்கியம் என அறுவகைப்படும். அவற்றுள் இயற்றமி ழிலக்கணமாவது எழுத்துஞ் சொல்லும் பொருளும் யாப்பு மணியுமென்னுமைவகைப்பட்ட இலக்கணங்களையுங் கூறும் நூலாம். இவ்வைவகைப்பட்ட இலக்கணங்களையுங்கூறும் நூல்கள் தொல்காப்பியம், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம் முதலியனவாம்.

இனி, இயற்றமிழிலக்கியமாவது முற்கூறப்பட்ட இலக்கண நூல்களிற் சொல்லப்படும் இலக்கணங்களினமைதியாகவுள்ள நூலாம். அவை தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தமும் பிறவுமாம். அவற்றுள், தொண்ணூற்றாறு

வகைப் பிரபந்தமாவன சாதகம், பிள்ளைக்கவி, பரணி கலம்பகம், அகப்பொருட்கோவை, ஐந்திணைச் செய்யுள், வருக்கக் கோவை, மும்மணிக்கோவை, அங்கமாலை, அட்டமங்கலம், அநுராகமாலை, இரட்டைமணிமாலை, இணைமணிமாலை, நவமணிமாலை, நான்மணிமாலை, நாமமாலை, பல்சந்தமாலை, பன்மணிமாலை, மணிமாலை, புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச்சிமாலை, வருக்கமாலை, மெய்க்கீர்த்திமாலை, காப்புமாலை, வேனின்மாலை, வசந்தமாலை, தாரகைமாலை, உற்பவமாலை, தானைமாலை, மும்மணிமாலை, தண்டகமாலை, வீரவெட்சிமாலை, வெற்றிக்கரந்தை மஞ்சரி, போர்க்கெழுவஞ்சி, வரலாற்றுவஞ்சி, செருக்களவஞ்சி, காஞ்சிமாலை, நொச்சிமாலை, உழிஞைமாலை, தும்பைமாலை, வாகைமாலை, வாதோரண மஞ்சரி, எண்செய்யுள், தொகைநிலைச் செய்யுள், ஒலியலந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, உலா, உலாமடல், வளமடல், ஒருபா ஒருபஃது, இருபா இருபஃது, ஆற்றுப்படை, கண்படைநிலை, துயிலெடைநிலை, பெயரின்னிசை, ஊரின்னிசை, பெயர்நேரிசை, ஊர்நேரிசை, ஊர்வெண்பா, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், அரசன் விருத்தம், நயனப் பத்து, பயோதரப்பத்து, பாதாதிகேசம், கேசாதிபாதம், அலங்கார பஞ்சகம், கைக்கிளை, மங்கல வள்ளை, தூது, நாற்பது, குழமகன், தாண்டகம், பதிகம், சதகம், செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து, பவனிக்காதல், குறத்திப்பாட்டு, உழத்திப் பாட்டு, ஊசல், எழுகூற்றிருக்கை, கடிகை வெண்பா, சின்னப்பூ, விருத்தவிலக்கணம், முதுகாஞ்சி, இயன்மொழி வாழ்த்து, பெருமங்கலம், பெருங்காப்பியம், காப்பியம் என்பனவாம். அவற்றுள்,

1. சாதகமாவது திதிநிலை, வாரநிலை, நாண்மீனிலை, யோகநிலை, கரணநிலை, ஓரைநிலை, கிரகநிலை என்னுமிவ் வெழுவகையுறுப்பு நிலையுஞ் சோதிட நூலா னன்குணர்ந் தவற்றை யமைத்தவற்றாற் றலைவற்குறுவன கூறுவதாம்.

2. பிள்ளைக்கவி ஆண்பாற் பிள்ளைக்கவியும், பெண் பாற். பிள்ளைக்கவியுமென இருவகைப்படும். அவற்றுள் ஆண்பாற் பிள்ளைக் கவியாவது காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற் றில், சிறுதேர் என்னுமிவற்றை முறையே ஆசிரியவிருத் தத்தாற் பப்பத்தாகப் பாடுவதாம். பெண்பாற் பிள்ளைக் கவியாவது காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத் தம், வாரானை, அம்புலி, கழங்கு. அம்மனை, ஊசல் என் னுமிவற்றை முறையே ஆசிரியவிருத்தத்தாற் பப்பத்தா கப் பாடுவதாம்.

3. பரணியாவது போர்முகத்தாயிரங் களிற்றுயானை யைக் கொன்ற வீரனைத் தலைமகனாகக்கொண்டு கடவுள் வாழ்த்துங் கடைதிறப்பும் பாலைநிலமுங் காளிகோயிலும் பேய்களோடு காளியுங் காளியோடு பேய்களுஞ் சொல் லத்தான் கருதிய தலைவன் கீர்த்தி விளங்கலு மவன்வழி யாகப் புறப்பொருடோன்ற வெம்போர் வழங்க விரும் பலுமென்றிவை யெல்லாம் இருசீரடி முச்சீரடி யொழித் தொழிந்த பிறவடியாக வீரடிப் பஃறாழிசையாற் பாடுவ தாம்.

4. கலம்பகமாவது ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையு முதற்கவியுறுப் பாகமுற்கூறிப் புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக் கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னுமிப் பதினெட்

டுறுப்புக்களுமியைய, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறையென்னு மிவற்றால் இடையே வெண்பா, கலித்துறை, விரவியந்தாதித் தொடையான் முற்றுறக் கூறுங்காற் றேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கைம்பதும், சூத்திரர்க்கு மூப்பதுமாகப் பாடுவதாம்.

5. அகப்பொருட்கோவையாவது இருவகைப்பட்ட முதற்பொருளும், பதினன்கு வகைப்பட்ட கருப்பொருளும், பத்துவகைப்பட்ட வுரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலுற்ற வன்புடைக் காமப் பகுதியவாங் களவொழுக்கத்திணையுங் கற்பொழுக்கத்திணையுங் கூறுதலே யெல்லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றுற்றிணை முதலாகத் துறையீறாகக் கூறப்பட்ட பன்னிரண்டகப்பாட்டுறுப்பும். வழுவின்றித் தோன்றப் பாடுவதாம். இது வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணமென்னு மிவற்றானும் வழங்கப்படும்.

6. ஐந்திணைச் செய்யுளாவது புணர்தன் முதலிய வைந்துரிப் பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய வைந்திணையுங் கூறுவதாம்.

7. வருக்கக் கோவையாவது அகர முதலாகிய வெழுத்து வருக்க மொழிக்கு முதலாமெழுத்து முறையே கலித்துறையாற் பாடுவதாம்.

8. மும்மணிக்கோவையாவது ஆசிரிப்பாவும், வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் முறையே தொகை முப்பதுபெறவடுக்கி யந்தாதியாகப் பாடுவதாம்.

9. அங்கமாலையாவது ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் மிக்கென வெடுத்துக் கூறுமவயவங்களை வெண்பாவாலாயினும் வெளிவிருத்தத்தாலாயினும் பாதாதிகேசம் கேசாதிபாத முறை பிறழாது தொடர்வுறப் பாடுவதாம்.

10. அட்டமங்கலமாவது கடவுளைப் பாடி அக்கடவுள் காக்கவென வாசிரிய விருத்த மெட்டிலந்தாதித்துப் பாடுவதாம்.

11. அநுராக மாலையாவது தலைவன் கனவின்கணொருத்தியைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து இனிதிற் புணர்ந்ததை இன்னுயிர்ப் பாங்கற்கு நனவினுரைத்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் பாடுவதாம்.

12. இரட்டைமணி மாலையாவது முறையானே வெண்பாவுங் கலித்துறையும் இருபது அந்தாதித் தொடையாற் பாடுவதாம்.

13. இணைமணி மாலையாவது வெண்பாவும் அகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாக இரண்டிரண்டாக வி‌ணைத்து வெண்பா வகவலிணை மணிமாலை, வெண்பாக் கலித்துறை யிணைமணிமாலை யென நூறுநூறு அந்தாதித் தொடையாக வரப் பாடுவதாம்.

14. நவமணி மாலையாவது வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமும் ஒன்பதுற அந்தாதியாகப் பாடுவதாம்.

51. நான்மணி மாலையாவது வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலும். அந்தாதித் தொடையாக நாற்பது பாடுவதாம்.

16. நாமமாலையாவது அகவலடியுங் கலியடியும்வந்து மயங்கிய வஞ்சிப் பாவால் ஆண்மகனைப் புகழ்ந்து பாடுவதாம்.

17. பல்சந்த மாலையாவது பப்பத்துச் செய்யுளொவ்வோர் சந்தமாக நூறு செய்யுள் பாடுவதாம்.

18. பன்மணி மாலையாவது முற்கூறிய கலம்பகத்துள் வரும் ஒருபோகும், அம்மானையும், ஊசலுமின்றி ஏனை யுறுப்புக்களெல்லாமமைய அவ்வாறு கூறுவதாம். இது கலம்பக மாலை யென்றுங் கூறப்படும்.

19. மணிமாலையாவது எப்பொருண்மேலும் வெண்பா இருபதும் கலித்துறை நாற்பதும் விரைவிரவப் பாடுவதாம்.

20. புகழ்ச்சி மாலையாவது அகவலடியுங் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவான் மாதர்களது சீர்மையைக் கூறுவதாம்.

21. பெருமகிழ்ச்சி மாலையாவது தலைவியினழகு, குணம், ஆக்கம், சிறப்பு என்னுமிவற்றைக் கூறுவதாம்,

22. வருக்கமாலையாவது மொழிக்கு முதலாம் வருக்க வெழுத்தினுக் கொவ்வோர் செய்யுட் கூறுவதாம்.

23. மெய்க்கீர்த்தி மாலையாவது சொற்சீரடியென்னுங் கட்டுரைச் செய்யுளாற் குலமுறையிற் செய்த கீர்த்தியைக் கூறுவதாம்.

24. காப்பு மாலையாவது தெய்வங் காத்தலாக மூன்று செய்யுளானும், ஐந்து செய்யுளானும், எழு செய்யுளானும் பாடுவதாம்.

25. வேனின் மாலையாவது வேனிலையும், முதுவேனிலையும் சிறப்பித்துப் பாடுவதாம்.

26. வசந்த மாலையாவது தென்றலை வருணித்துப் பாடுவதாம்.

27. தாரகை மாலையாவது வகுப்பினால் அருந்ததிக் கற்பின் மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களைக் கூறுவதாம்.

28. உற்பவ மாலையாவது திருமால் பிறப்புப் பத்தினையும் ஆசிரியவிருத்தத்தாற் பாடுவதாம்.

29. தானை மாலையாவது அகவலோசையிற் பிறழாத வாசிரியப்பாவான் முன்னரெடுத்துச் செல்லுங் கொடிப்படையைக் கூறுவதாம்.

30. மும்மணி மாலையாவது வெண்பாவுங் கலித்துறையு மகவலும் அந்தாதித் தொடையான் முப்பது பாடுவதாம்.

31. தண்டக மாலையாவது வெண்பாவான் முந்நூறு செய்யுட் கூறுவதாம். இது வெண்புணர்ச்சிமாலையெனவுங் கூறப்படும்.

32. வீரவெட்சி மாலையாவது சுத்தவீரன் மாற்றாரூரிற் சென்று பசுநிரை கோடற்கு வெட்சிப் பூமாலை சூடியவண்ணம் போய் நிரை கவர்ந்து வரில் அவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப் போய் வந்த வெற்றியைப் பாடுவதாம்.

33. வெற்றிக்கரந்தை மஞ்சரியாவது பகைவர் கொண்ட தந்நிரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப் போய் மீட்பதைக் கூறுவதாம்.

34. போர்க்கெழுவஞ்சியாவது மாற்றூர்மேற் போர் குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப் பூமாலை சூடிப் புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை யாசிரியப் பாவாற் பாடுவதாம்,

35. வாலாற்று வஞ்சியாவது குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையும் கீர்த்தியையும் வஞ்சிப் பாவாற் கூறுவதாம்.

36. செருக்கள வஞ்சியாவது போர்க்களத்திலே பட்ட மனிதருடலையும் யானை குதிரை யுடலையும் நாயும் பேயும் பிசாசமுங் கழுகும் பருந்துங் காகமுந் தின்று களித் தாரவாரமாயிருக்கப் பூதமும் பேயும் பாடியாட விங்ஙனமிருந்த சிறப்புப் பாடுவதாம். இது பறந்தலைச் சிறப்புப் பாட்டெனவுங் கூறப்படும்.

37. காஞ்சிமாலையாவது மாற்றூரைப் புறத்துக் காஞ்சிப் பூமாலை சூடி யூன்றலைக் கூறுவதாம்.

38. நொச்சிமாலையாவது புறத்தூன்றிய மாற்றூர்க் கோடலின்றி நொச்சிப்பூமாலை சூடித் தன் மதில் காக்குந் திறங் கூறுவதாம்.

39. உழிஞை மாலையாவது மாற்றாரதூர்ப் புறஞ்சூழ வுழிஞைப் பூமாலை சூடிப் பொருதுவதைக் கூறுவதாம்.

40. தும்பை மாலையாவது மாற்றாரோடு தும்பைப் பூமாலை சூடிப் பொருதுவதைக் கூறுவதாம்.

41. வாகைமாலையாவது மாற்றாரை வென்று புகழ் படைத்து வாகைமாலை சூடுவதை யாசிரியப் பாவாற் கூறுவதாம்.

42. வாதோரண மஞ்சரியாவது கொலைபுரி மத யானையை வயப்படுத்தி யடக்கினவர்கட்கும் எதிர்பொரு

களிற்றை வெட்டியடக்கினவர்கட்கும் பற்றிப் பிடித்துச் சேர்த்தவர்கட்கும் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பா வாற் றெடுத்துப் பாடுவதாம்.

43 எண்செய்யுளாவது பாட்டுடைத் தலைவனதூ ரினையும் பெயரினையும் பத்துமுத லாயிர மளவும் பாடி யெண்ணாற் பெயர் பெறுவதாம்.

44. தொகைநிலைச் செய்யுளாவது பொருள், இடம், காலம், தொழில், பாட்டு, அளவு என்னுமிவற்றுளொன் றாற் றொகுக்கப்படுவதாம்.

45. ஒலியலந்தாதியாவது பதினாறுகலை யோரடியாக வைத்து இங்ஙனம் நாலடிக் கறுபத்து நாலு கலை வகுத் துப் பல்சந்தமாக வண்ணமுங் கலைவைப்புந் தவறாம லந் தாதித்து முப்பது செய்யுட் பாடுவதாம். சிறுபான்மை எட்டுக் கலையானும் வரப்பெறும். அன்றியும் வெண்பா அகவல் கலித்துறை ஆகிய இம்மூன்றையும் பப்பத்தாக வந்தாதித்துப் பாடுவதுமாம்.

46. பதிற்றந்தாதியாவது பத்து வெண்பா பத்துக் கலித்துறை பொருட்டன்மை தோன்றப்படுவதாம்.

47. நூற்றந்தாதியாவது வெண்பா நூறு, கலித் துறை நூறு அந்தாதித் தொடையாற் பாடுவதாம்.

48. உலாவாவது இளமைப் பருவமுற்ற தலைமகனைக் குலங் குடிப்பிறப்பு மங்கலம் பரம்பரை யிவற்றா னின் னானென்பது தோன்றத் தலைமையாய மாதர் நெருங்கிய வீதியிடத்தவன் பவனிவரப் பேதை முதலிய வேழுபரு வப் பெண்களும் கண்டுதொழ வுலா வந்ததாக நேரிசைக் கலி வெண்பாவாற் கூறுவதாம்.

49. உலாமடலாவது கனவிலொரு பெண்ணைக் கண்டு கலவி யின்ப 'நுகர்ந்தோன் விழித்தபின் னவள் பொருட்டு மடலூர்வேனென்பதைக் கலி வெண்பாவாற் பாடுவதாம்.

50. வளமடலாவது அறனும் பொருளும் வீடு மென்றுகூறும் அம்மூன்று கூறுபாட்டின்பயனையும் எள்ளி மங்கையர் திறத்துறுங் காமவின்பத்தையே பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலைவனியற் பெயர்க்குத் தக்கதை யெதுகையாக நாட்டியுரைத் தவ்வெதுகைபடத் தனிச் சொல்லின்றி யின்னிசைக் கலிவெண்பாவாற் றலைமகனி ரந்து குறைபெறாது மடலேறுவதாக வீரடி எதுகைவரப் பாடுவதாம்.

51. ஒருபாவொருபஃதாவது அகவலும் வெண்பா வுங் கலித்துறையுமாகிய விவற்றுளொன்று லந்தாதித் தொடையாகப் பத்துச் செய்யுள் பாடுவதாம்.

52. இருபாவிருபஃதாவது பத்து வெண்பாவும் பத் தகவலு மந்தாதித் தொடையா னிருபதிணைந்துவரப் பாடு வதாம்.

53. ஆற்றுப்படையாவது அகவற்பாவால் விறலி, பாணர், கூத்தர், பொருநர் இந்நால்வருளொருவர் பரிசிற் குப் போவாரைப் பரிசு பெற்றுவருவாராற்றிடைக்கண்டு தலைவன் கீர்த்தியுங் கொடையுங் கொற்றமுஞ் சொல்வ தாகப் பாடுவதாம்.

54. கண்படை நிலையாவது அரசரும் அரசரைப் போல்வாரும் அவைக்கண் நெடிது வைகியவழி மருத்து வரும் அமைச்சரும் முதலியோர் அவர்க்குக் கண்டுயில்கோ டலைக் கருதிக் கூறுவதாகப் பாடுவதாம்.

55. துயிலெடை நிலையாவது தன்வலியாற் பாசறைக் கண்ணொரு மனக்கவற்சியுமின்றித் துயின்றவரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் துயிலெழுப்புவதாகப் பாடுவதாம்.

56. பெயரின்னிசையாவது பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார இன்னிசை வெண்பாவாற் றொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவதாம்.

57. ஊரின்னிசையாவது பாட்டுடைத்தலைவ னூரினைச்சார வின்னிசை வெண்பாவாற் றொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும், பாடுவதாம்.

58. பெயர் நேரிசையாவது பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார நேரிசைவெண்பாவாற் றொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவதாம்.

59. ஊர்நேரிசையாவது பாட்டுடைத் தலைவனூரைச் சார நேரிசை வெண்பாவாற் றொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும் பாடுவதாம்.

60. ஊர்வெண்பாவாவது வெண்பாவலூரைச் சிறப்பித்துப் பத்துச்செய்யுள் பாடுவதாம்.

61. விளக்குநிலையாவது வேலும் வேற்றலையும் விலங்காதோங்கியவாறுபோலக் கோலொடு விளக்கு மொன்றுபட்டோங்குமாறோங்குவதாகப் பாடுவதாம்.

62. புறநிலையாவது நீவணங்குந் தெய்வ நின்னைப் பாதுகாப்ப நின் வழிவழி மிகுவதாகவெனப் பாடுவதாம்.

63. கடைநிலையாவது சான்றோர் சேணிடை வருதலாற் பிறந்த வருத்தந்தீர வாயில்காக்கின்றவனுக் கென் வரவினைத் தலைவற்கிசையெனக் கடைக்கணின்று கூறுவதாகப் பாடுவதாம்.

64. கையறுநிலையாவது கணவனொடு மனைவி கழிந்துழியவர்கட்பட்ட வழிவுப்பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தித் தாமிறந்துபடா தொழிந்த வாயத்தாரும் பரிசில் பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலறுநிலையைக் கூறுவதாம்.

65. தசாங்கப் பத்தாவது நேரிசை வெண்பாவால் அரசன்படைத்த தசாங்கத்தினைப் பத்துச்செய்யுளாற் கூறுவதாம்.

66. தசாங்கத்தயலாவது அரசன்றசாங்கத்தினை யாசிரிய விருத்தம் பத்தினாற் பாடுவதாம்.

67. அரசன் விருத்தமாவது பத்துக்கலித்துறையும் முப்பது விருத்தமுங் கலித்தாழிசையுமாக மலை, கடல், நாட்டு வருணனையும் நிலவருணனையும் வாண்மங்கலமுந் தோண்மங்கலமும் பாடி முடிப்பதாம். இது முடிபுனைவேந்தர்க்குரியதாம்.

68. நயனப்பத்தாவது கண்ணினைப் பத்துச்செய்யுளாற் பாடுவதாம்.

69. பயோதரப் பத்தாவது முலையினைப் பத்துச்செய்யுளாற் பாடுவதாம்.

70. பாதாதிகேசமாவது கலிவெண்பாவாலடிமுதன் முடியளவுங் கூறுவதாம்.

71. கேசாதிபாதமாவது கலிவெண்பாவான் முடிமுதலடியளவுங் கூறுவதாம்.

72. அலங்கார பஞ்சகமாவது வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரிய விருத்தம், சந்தவிருத்தம் இவ்வகையே மாறிமாறி நூறுசெய்யுளந்தாதித்துப் பாடுவதாம்.

73. கைக்கிளையாவது, ஒருதலைக் காமத்தினை ஐந்து விருத்தத்தாற் கூறுவதாம். அன்றி, முப்பத்திரண்டு வெண்பாவினாற் கூறுவதுமாம்.

74. மங்கலவள்ளையாவது உயர்குலத்துதித்த மடவாரை வெண்பாவொன்பதனால் வகுப்புறப் பாடுவதாம்.

75. தூதாவது ஆண்பாலும் பெண்பாலும் அவரவர் காதல் பாணன் முதலிய உயர்திணையோடும் கிள்ளை முதலிய அஃறிணையோடும் சொல்லித் தூதுபோய்வாவெனக் கலிவெண்பாவாற் கூறுவதாம்.

76. நாற்பதாவது காலமுமிடமும் பொருளுமாகிய விவற்றுளொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவதாம்.

77. குழமகனாவது கலிவெண்பாவினால் மங்கைமார் தங்கையிற் கண்ட இளமைத்தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து பாடுவதாம்.

78. தாண்டகம் அளவியற்றாண்டகமும், அளவழித் தாண்டகமுமென இருவகைப்படும். அவற்றுள், அளவியற் றாண்டகமாவது இருபத்தேழெழுத்து முதலாகவுயர்ந்த வெழுத்தடியினவாயெழுத்துங் குருவுமிலகுவுமொத்துவரப் பாடுவதாம். அளவழித் தாண்டகமாவது எழுத்தொவ்வாது மெழுத்தலகொவ்வாதும் வரப்பாடுவதாம்.

79. பதிகமாவது ஒருபொருளைக் குறித்துப் பத்துச் செய்யுளாற் கூறுவதாம்.

80. சதகமாவது அகப்பொருளொன்றன்மேலாதல் புறப்பொருளொன்றன்மேலாதல் கற்பித்து நூறு செய்யுட் கூறுவதாம்.

81. செவியறிவுறூஉவாவது பொங்குதலின்றிப் புரையோர் நாப்பணவிலுதல் கடனெனவவையடக்கியற் பொருளுற வெண்பாஃழுதலு மாசிரியமிறுதியுமாகப் பாடுவதாம்.

82. வாயுறைவாழ்த்தாவது வேம்புங் கடுவும்போல் வனவாகிய வெஞ்சொற்கண் முன்னர்த் தாங்கக்கூடாவாயினும், பின்னர்ப் பெரிதும் பயன்றருமென மெய்ப்பொருளுற வெண்பாமுதலு மாசிரியமிறுதியுமாகப் பாடுவதாம்.

83 புறநிலைவாழ்த்தாவது வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப் பழிதீர்செல்வமோடொருகாலைக்கொருகாற்சிறந்து பொலிவாயென வெண்பாமுதலு மாசிரிய மிறுதியுமாகப் பாடுவதாம்.

84. பவனிக்காதலாவது உலாக்காட்சியா லெய்திய காமமிக்காலவை பிறரொடு முரைத்து வருந்துவதாகப் பாடுவதாம்.

85. குறத்திப்பாட்டாவது தலைவன்பவனிவரவு, மகளிர்காமுறுதல், மோகினிவரவு, உலாப்போந்த தலைவனைக் கண்டுமயங்கல், திங்கள் தென்றன் முதலிய வுபாலம்பனம், பாங்கியுற்றதென்னென வினவல், தலைவி பாங்கியோடுற்றது கூறல், பாங்கி தலைவனைப்பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்துகூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவிபாங்கியொடு தலைவனடையாளங்கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியை மலைவள முதலியன வினவல், குறத்தி மலைவள நாட்டுவள முதலிய கூறல், தலைவன் றலைவளங் கிளைவள்ம் முதலிய கூறல், குறிசொல்லி வந்தமைகூறல், தலைவி குறிவினவல், குறத்தி தெய்வம் பராவல், குறிதேர்ந்து கூறல், வரவுகூறல், தலைவி பரிசிலுதவிவிடுத்தல், குறவன்வரவு, புள்வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்

கனேடு குறத்தியடையாளங்கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவனணி முதலிய கண்டையுற்று வினவலு மாண்டாண்டு குறத்தி விடைகூறலுமாகக்கூறல், பெரும் பான்மையு மிவ்வகை யுறுப்புக்களால் அகவல், வெண்பா, தாவுகொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலி விருத்தம் என்னு மிச்செய்யுளிடைக்கிடைகூறிச் சிந்துமுத லிய நாடகத்தமிழாற் பாடுவதாம்.

86. உழத்திப்பாட்டாவது கடவுள் வணக்கம் முறையே மூத்தபள்ளி இளையபள்ளி குடும்பன் வரவோ டவன் பெருமை கூறல், முறையே அவர் வரலாறு, நாட்டு வளன், குயிற்கூக் கேட்டல், மழைவேண்டிக் கடவுட் பா வல், மழைக்குறியோர்தல், ஆற்றின்வரவு, அதன் சிறப் புக் காண்டல், இவற்றிற்கிடையிடை யகப்பொருட்டுறை யுங் கூறிப், பண்ணைத் தலைவன் வரவு, பள்ளிகளிருவர் முறையீடு, இளையாளையவனுரப்பல், பள்ளன் வெளிப் படல், பண்ணைச்செயல் வினவல், அவனதுகூறல், ஆயரை வருவித்தல், அவர்வரல், அவர் பெருமைகூறல், மூத்த பள்ளிமுறையீடு, குடும்பன்கிடையிலிருந்தான்போல்வரல், அவனைத்தொழுவின் மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளியடிசிற்கொடுவரல், அவனவளோடு கூறல், அவன வளை மன்னித்தல்கேட்க வேண்டல், அவன் மறுத்தல், அவன் சூளுறல், அவ்னவளை மீட்கவேண்டிப் பண்ணைத் தலைவனைப் பரவல், விதை முதலிய வளங் கூறல், உழவரு ழல், காளைவெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளி கள் புலம்பல், அவனெழுந்துவித்தல், அதைப் பண்ணைத் தலைவற்கறிவித்தல், நாறுநடல், விளைந்தபிற் செப்பஞ் செய்தல், நெல்லளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளி களுள் ஒருவர்க்கொருவரேசல், என்னுமிவ் வுறுப்புக்களு

றப்பாட்டுடைத் தலைவன் பெருமை, ஆங்காங்குத் தோன் றச் சிந்தும் விருத்தமும் விரவிவரப் பாடுவதாம்.

87. ஊசலாவது ஆசிரியவிருத்தத்தானுதல் கலித் தாழிசையானுதல் சுற்றத்தொடும் பொலிவதாக, ஆடி ரூஊசல், ஆடாமோவூசல் என்றிறப் பாடுவதாம்.

88. எழுகூற்றிருக்கையாவது எழறையாக்கிக் குறு மக்கண் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமையா லொன்றுமுதலாக வேழிறுதி யாக முறையானே பாடுவதாம்.

89. கடிகை வெண்பாவாவது தேவரிடத்தும் அரச ரிடத்தும் நிகழுங் காரியம் கடிகையளவிற்றோன்றி நடப்ப தாக முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவாற் கூறுவ தாம்.

90. சின்னப்பூவாவது நேரிசைவெண்பாவா லரச னது சின்னமாகிய தசாங்கத்தினைச் சிறப்பித்து விரித்து நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னு மெண்படக் கூறுவதாம்

91. விருத்த விலக்கணமாவது வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை என்னுமிவ் வொன்பதினையும் பப்பத்து விருத்தத்தா லொன்பது வகையுறப் பாடுவதாம்.

92. முதுகாஞ்சியாவது இளமை கழிந்த வறிவுமிக் கோர் இளமை கழியாத வறிவின் மாக்களுக்குக் கூறுவதா கப் பாடுவதாம்.

93. இயன்மொழி வாழ்த்தாவது இக்குடிப் பிறந் தோர்க்கெல்லா மிக்குண மியல்பென்றும். அவற்றை நீயு மியல்பாகவுடையையென்றும், இன்னோர்போல நீயுமியல்

பாக வீயென்றும் உயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக் கூறுவதாம்.

94. பெருமங்கலமாவது நாடோறுந் தானமேற் கொள்கின்ற சிறைசெய்தன் முதலிய செற்றங்களைக் கை விட்டுச் சிறைவிடுதன் முதலிய சிறந்த தொழில்கள் பிறத் தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவதாம்.

95. பெருங்காப்பியமாவது தெய்வ வணக்கமும் செயப்படுபொருளும் வாழ்த்துமென் றிவற்றுளொன்று முன்வரப்பெற்றதாய், அறம் பொருள் இன்பம் வீடு என் னும் நாற்பொருளும் பயக்கும் நெறியுடைத்தாய், நிகரி லாத் தலைவனையுடைத்தாய், மலையே கடலே நாடே நகரே பருவமே இருசுடர்த் தோற்றமே என்றிவற்றின் வளங் கூறுதலும், மணவினையும், முடிகவித்தலும், பொழில் விளையாட்டும், நீர்விளையாட்டும், உண்டாட்டும், மகப்பே றும், புலவியும், கலவியும் என்றிவற்றைப் புகழ்தலும், மந்திரமும், தூதும், செலவும், போரும், வென்றியும் என்றிவற்றைத் தொடர்ந்து கூறலுமாகிய வினை முறையே தொடர்வுறச்சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பகுதியையுடைத்தாய், நெருங்கிய சுவையும், மெய்ப்பா டும் கேட்போர்மதிக்கப் புலவர்களாற் பாடப்படுவதாம். நாற்பயனொழிந்தொழிந்தவனைய வுறுப்புக்களுட்சில குறைந் தியலினுங் குற்றமின்றாம்.

96. காப்பியமாவது அறம் பொருள் இன்பம் வீடு என்னு நான்கனுள் ஒன்றும் பலவுங் குறைந்து ஏனைய வுறுப்புக்கள் மேற்கூறியவாறியல்வதாம்.

தமிழ்நாட்டில் வழங்கும் இத்தொண்ணூற் றாறுவ கைப் பிரபந்த நூல்களின் பெயர்களும் விரிவஞ்சிச் சுண்டு

கூறப்படாவாயின. பிறவுமென்றவற்றுள் இதிகாசம் முதலியவையடங்குமென்பது.

இனி, இசைத்தமிழிலக்கணமாவது ஏழ்வகைப்பட்ட இசையினிலக்கணமும், பண், பண்ணியல், திறன், திறத்திறன் என்னும்பண்ணின் கூறுபாடும், அவற்றினிலக்கணமும், ஆளத்தியினிலக்கணமும், பாணி, தூக்கு, சீர் என்றிவற்றினிலக்கணமும், பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், என்னும் யாழ்களினிலக்கணமும், குழலினிலக்கணமும், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, காடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப் பறை, துடி, பெரும்பறை என்னும் முப்பத்திரண்டு வகைத் தோற்கருவிகளி னிலக்கணமும் பிறவுங் கூறு நூலாம். இவ்விசைத் தமிழிலக்கணத்தைக் கூறுநூல்கள், பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், சொல்லகத்தியம், ஆசிரியமாலை, இசைநுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, தாளவகையோத்து, சச்சபுட வெண்பா, தாளசமுத்திரம், பதினாறு படலம் முதலியனவாம்.

இனி, இசைத்தமிழிலக்கியமாவது முற்கூறிய இசைத் தமிழிலக்கணத்தின் அமைதியாயுள்ள நூலாம். இவ்விசைத்தமிழிலக்கிய நூல்களெல்லாம் பண்டைஞான்றே அழிந்தொழிந்தமையின் அவற்றின் பெயர் யாதும் விளங்கவில்லை. இஞ்ஞான்று இசைத்தமிழிலக்கியங்களாக விளங்குவன பரிபாடலும், சிலப்பதிகாரத்திலுள்ள கானல்வரி

முதலியனவும், பிற்காலத்துச் சமய குரவர்களாய் விளங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னு மிவர்கள் செய்த தேவாரங்களுமேயாம்.

இனி, நாடகத்தமிழிலக்கணமாவது அகக்கூத்து, புறக்கூத்து, பதினோராடல் என்பவற்றினிலக்கணமும், பொருள், யோனி, விருத்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்துவம், அவிநயம், செலல், சொல்லின் கூறுபாடு, வண்ணம், வரி, சேதம் என்னும் பதினான்குவகைவிலக்குறுப்பினிலக்கணமும், கூத்தியதமைதியும், ஆடலாசிரியனதமைதியும், அரங்கினமைதியும், பிறவுங் கூறும் நூலாம். இந்நாடகத் தமிழிலக்கணத்தைக் கூறும் நூல்கள் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், சுத்தானந்தப்பிரகாசம், நாடகவியல், பரதசேனாபதீயம், கூத்தநூல், நூல், பரதம் முதலியனவாம்.

இனி, நாடகத் தமிழிலக்கியமாவது முற்கூறிய நாடகத் தமிழிலக்கணத்தினமைதியாயுள்ள நூலாம். இந்நாடகத் தமிழிலக்கிய நூல்கள் இசைத்தமிழிலக்கியங்கள்போலப் பண்டைநான்றே அழிந்தொழிந்தன. இப்பொழுது நாடகவிலக்கியங்களாக விளங்குவன சுந்தரம்பிள்ளையியற்றிய மனோன்மணீயமும், சூரியநாராயண சாஸ்திரிகளியற்றிய கலாவதி, ரூபாவதி, மானவிஜயம் முதலியனவும் பிறவுமாம்.

இனி, பண்டைநான்று நந்தமிழ் மொழியில் இவ்வியலிசை நாடக விலக்கண விலக்கிய நூல்களேயன்றிப் பல்வேறுவகைப்பட்ட பிறகலைநூல்களுமிருந்தன. அவைகளெல்லாம் தமிழ்நாட்டில் இடையிடையே நிகழ்ந்த கடல்

கோள் முதலிய இடையூறுகளால் அழிந்தொழிவனவா யின. அங்ஙனம் அவை அழிந்தொழிந்தனவென்பது,

> "ஏரணமுருவம் யோகமிசை கணக்கிரதஞ்சாலந்
> தாரணமறமே சந்தந் தம்பநீர் நிலமுலோகம்
> மாரணம் பொருளென்றின்ன மான்நூல் யாவும்வாரி
> வாரணங்கொண்டதந்தோ வழிவழிப் பெயருமாள"

என்னும் பண்டைச்செய்யுளா னுணரப்படும்.

இனி, பதினாறுவரி கருமமும், ஆறுகலாச வருணமும், இரண்டுபிரகாணச் சாதியும், முதகுப்பையும், ஐங்குப்பை யும், என்றிப்பரிகருமமும், மிச்சிரகமுமுதலாகிய எட்டதி காரமும் பொருந்திய அவினந்தமாலையும், அரசசட்டமும், வருத்தமானமும், ஏரம்பமும் முதலிய கணிதநூல்களும், குண்டலம், நீலம், பிங்கலம், அஞ்சனம், தத்துவதரிசனம், காலகேசி முதலிய தருக்க நூல்களுமே அக்காலத்திருந்த தமிழ்மொழிப் பிறகலைநூல்களாக உணரப்படுகின்றன. இன்னும் பிற்காலத்தில் பராசசேகரம் முதலிய வைத்திய நூல்களும், செகராசசேகரம் முதலிய சோதிட நூல்களும் பிறகலைநூல்களுட் சிலவும் உண்டாயினவென்பது.

## கூ. தமிழ்மொழிப் புலவர்

இனி, தமிழ்நாட்டின் கண்ணே தமிழ்மொழியைப் பிற்றநிலை முனியாது கற்றுவல்ல பெரும் புலவர் பலர் இருந்தனர். அவர்களே தண்டமிழன்னையின் அரும்பெ றற் புதல்வராயிருந்து அவ்வன்னையைச் சீர்பெறச் செய் தனர். பண்டைஞான்றுள்ள புலவர் யாவரும் பலதுறைக் கலையினும் ஆழ்ந்தகன்ற அறிவினையுடையாராயிருந்தனர். அவர்கள் தாங்கற்றதன் பயனாகப் பலப்பல தமிழ்நூல்

களையும், பலப்பல தமிழ்ச் செய்யுள்களையும் இயற்றினர். அவர்கள் அவற்றை அங்ஙனம் இயற்றினமையினாலேயே யாம் இஞ்ஞான்று பண்டைத் தமிழ்ச் சங்கங்களையும், தமிழின் பண்டைப் பெருமையையும், தமிழரின் பண்டை நாகரிகங்களையும் பிறவற்றையும் அறியத்தக்கவர்களாயிருக்கின்றோம். சுருங்கக் கூறின் தண்டமிழ்ப் புலவர்களே தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணராவாரென்னலாம்.

இனி, தமிழ்மொழிப் புலவர்களைத் தலைச்சங்கப் புலவர், தலைச்சங்கத்துப் பாடிய புலவர், இடைச்சங்கப் புலவர், இடைச்சங்கத்துப் பாடிய புலவர், கடைச்சங்கப் புலவர், கடைச்சங்கத்துப் பாடிய புலவர், பிற்காலப் புலவர், என ஏழு பிரிவினராக வகுக்கலாம். அவருள், தலைச்சங்கப் புலவர் ஐஞ்ஞாற்றுநாற்பத்தொன்பதின்மர் (549) ஆவர். அவருள்,

1. அகத்தியனார்
2. மார்க்கண்டேயனார்
3. வான்மீகனார்
4. கவுதமனார்
5. இறையனார்
6. குமரவேள்
7. முரஞ்சியூர் முடிநாகராயர்
8. நிதியின் கிழவன்
9. சக்கரக்கோ
10. போற்று நெடுந்துறையன்
11. இடைக்கழிச் செங்கோடன்
12. தனியூர்ச்சேந்தன்

என்னும் பன்னிருவருடைய பெயருமே இஞ்ஞான்று நம்மால் உணரத்தக்கதாயிருக்கின்றது. ஏனைய ஐஞ்ஞூற்று முப்பத்தெழுவர் பெயரும் அறிதற்கேற்ற ஆதாரமொன்றுங் கிடைக்கப் பெறுமையின் அறிய முடியவில்லை.

இனி, தலைச்சங்கத்துப் பாடிய புலவர் மூவாயிரத்துத் தொளாயிரவர் (3900) ஆவர். அக்காலத்துத் தோன்றிய நூலேனும், தனிச் செய்யுளேனும் கிடைக்கப் பெறுமையின் அவர் பெயரைப் பற்றி யாதும் அறிய முடியவில்லை.

இனி, இடைச்சங்கப் புலவர் ஐம்பத்தொன்பதின்மர் (59) ஆவர். அவருள்,

1. அகத்தியனர்
2, தொல்காப்பியனர்
3. இருந்தையூர்க் கருங்கோழி மோசியார்
4. வெள்ளூர்க் காப்பியனர்
5. சிறுபாண்டரங்கனர்
6. திரையன்மாறன்
7. துவரைக்கோன்
8. கீரந்தை

என்னும் எண்மருடைய பெயருமே அறியத்தக்கதாயிருக்கின்றது. ஈண்டுக் கூறிய அகத்தியனர் தலைச் சங்கத்திருந்த அகத்தியனரே. தொல்காப்பியர் காலத்தினராகிய அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் முதலியோர் இடைச்சங்கப்புலவரோ அன்றி இடைச்சங்ககாலப் பிற புலவரோ என அறிந்துகொள்ள முடியவில்லை.

இனி, இடைச்சங்கத்துப் பாடிய புலவர் மூவாயிரத்தறுநூற்றுநாற்பத்தொருவர் (3641) ஆவர். அவரின்

பெயரைப்பற்றி அறிந்துகோடற்குத் தக்க ஆதாரமொன்றும் இஞ்ஞான்றின்றென்பது.

இனி, கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மர் (49) ஆவர். அவர்கள்,

(1) கபிலர்
(2) பரணர்
(3) நக்கீரர்
(4) மாமூலர்
(5) கல்லாடர்
(6) சீத்தலைச்சாத்தனார்
(7) மருத்துவன்றாமோதரனார்
(8) நாகன்றேவனார்
(9) அரிசில்கிழார்
(10) பொன்முடியார்
(11) கோதமனார்
(12) நத்தத்தனார்
(13) ஆசிரியர்நல்லந்துவனார்
(14) கீரந்தையார்
(15) சிறுமேதாவியார்
(16) நல்கூர்வேள்வியார்
(17) தொடித்தலைவிழுத்தண்டினார்
(18) வெள்ளிவீதியார்
(19) மாங்குடிமருதனார்
(20) எறிச்சலூர் மலாடனார்
(21) போக்கியார்
(22) மோசிகீரனார்
(23) காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
(24) மதுரைத்தமிழ்நாகனார்

(25) பாரதம் பாடிய பெருந்தேவனார்
(26) உருத்திரசன்மகண்ணனார்
(27) பெருஞ்சித்தனார்
(28) நரிவெரூஉத்தலையார்
(29) மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்
(30) மதுரையறுவை வாணிகனிளவேட்டனார்
(31) கவிசாகரப் பெருந்தேவனார்
(32) மதுரைப்பெருமருதனார்
(33) கோவூர்க்கிழார்
(34) உறையூர்முதுகூற்றனார்
(35) இழிகட்பெருங்கண்ணனார்
(36) செயர்க்காவிரியார் மகனார் சாத்தனார்
(37) செயலூர்க்கொடுஞ் செங்கண்ணனார்
(38) வண்ணக்கஞ்சாத்தனார்
(39) களத்தூர்க்கிழார்
(40) நச்சுமனார்
(41) அக்காரக்கனிநச்சுமனார்
(42) நப்பாலத்தனார்
(43) குலபதிநாயனார்
(44) தேனிக்குடிக்கீரனார்
(45) கொடிஞாழன்மாணிபூதனார்
(46) கவுணியனார்
(47) மதுரைப் பாலாசிரியனார்
(48) ஆலங்குடி வங்கனார்
(49) முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

என்போராவர்.

இனி, கடைச்சங்கத்துப் பாடிய புலவர் நானூற்றுவர் (400) ஆவர். அவர்களைப்பற்றித் தனியே யொரு

நூலெழுதக் கருதியுள்ளேமாகலின், ஈண்டு அவர்விடமாக யாதுங் கூறக் கருதிற்றிலம்.

இனி, பிற்காலப் புலவர் கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலாகப் பல்லோராவர். அவரைப்பற்றி யீண்டுக் கூறப் புகின் கட்டுரை பல்குமாதலின் வாளாவிடுகின்றேம்.

## ௧௦. தமிழறிவின் பயன்

இனி, தண்டமிழ்ப்புலமை சான்ற நல்லாசிரியனை யடைந்து வழிபட்டுப் பலதுறைத் தமிழ்நூல்களையும் முறையானே யையந்திரிபறக் கற்றுணர்ந்தோர்க்கு அவ்வுணர்வா னெய்தும் பயன் புகழும் பொருளும் நட்பும் அறனும் இன்பமும் இறைவனருளும் துறக்கமும் வீடு பேறுமாம். என்னை? உலகத்தாரானுஞ் சமயத்தாரானு மொருங்கு புகழப்படுதலிற் கற்றுவல்லனென்பதினின் மிக்க புகழில்லையாகலிற் புகழும், பொருளுடையாரும் பொருள் கொடுத்துக் கற்பவாகலிற் பொருளும், கற்றாரைச் சார்ந் தொழுகவே நமக்குமறிவு பெருகுமென்று பலருஞ்சார்ந் தொழுகலின் நட்பும், ஞானத்தின் மிக்க கொடையின் மையானறனும், நூல்களைத் துருவித் துருவி யாராய்ந் துணர்வுழிச் சொற்சுவையும் பொருட்சுவையு மொருங்கு துய்க்கப்படுதலின் இன்பமும், இறைவன் புகழையாத்துப் புகல்வுழி யவனு வந்தருள் கொழித்தலின் இறைவனருளும் "சம்யக்பிரயுக்தர்கௌ: சுவர்க்கேலோகே தாமதுக் பவதி" என்பவாகலிற்றுறக்கமும்,

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்பவாகலின் வீடு பேறு மடைதல் உணரப்படுதலா னென்பது.

இனி, உலகின்கண் மலவயத்தா னிடையீடின்றிப் பிறந்திறந் துழலும் மக்கள், தம்மக்கட் பிறப்பினுலாம் பெரும்பயனைப் பெறுதலென்பது, நூல்களைக் கற்றுக் கற்றுக் கற்றுங்கொழுகி யிறைவனருள் பெற்று மலக்கட்டறுத்து அவன்றிருவடி நீழலுற் றந்தமிலின்ப மனுபவித்தலேயாமாகலின், மக்கட் பிறப்பினுற் பெரும் பயனைப் பெற்றுய்திகூடக் கருதுந் தமிழ்மக்கட்குத் தமிழ் நூலறிவு ஒருதலையான் வேண்டப்படுமென்பது.

## வாழி

தமிழ்மாது வாழிநலஞ் சார்பொருண்மிக் கோங்குந்
தமிழ்நூல்கள் வாழியவே சாலத்—தமிழாய்ந்தோர்
வாழிதமி ழாராய்ச்சி வாழிதிரை யோதமிகு
மாழிதிகழ் நற்பா ரகத்து

தமிழ்மொழியாராய்ச்சி முற்றிற்று.